

# புகாரில் ஒரு நாள்

பரிசுக் கவிதைகள்

திருக்குறள்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

உலகத் தமிழ் மாநாடு
சென்னை — 1968

O-,1x
N68
164417

# புகாரில் ஒரு நாள்

## பரிசுக் கவிதைகள்

உலகத் தமிழ் மாநாடு
சென்னை — 1968

மலர்க்குழு வெளியீடு]    [விலை ரூ. 1-00

# புக்ஃரில் ஒரு நாள்

## கவிதை ஆய்வுக் குழுவினர்

தலைவர் :

திரு. மா. கி. தசரதன், எம். ஏ.

அமைப்புச் செயலாளர்:

திரு. மு. ரா. பெருமாள் முதலியார்,
எம்.ஏ.,எல்.டி.

உறுப்பினர் :

திரு. கொத்தமங்கலம் சுப்பு

திரு. கீ. இராமலிங்கம், எம். ஏ.

திரு. நா. பாண்டுரங்கன், எம். ஏ.

திரு. பொன்னிவளவன்

திரு. வல்லை – பாலசுப்பிரமணியம்

திரு. கே. கே. கோதண்டராமன், எம். எல். சி.

திரு. கா. வேழவேந்தன், எம். எல். ஏ.

திரு. ஔவை நடராசன்

திரு. மு. க. தங்கவேலன்

திரு. சி. பாலசுப்பிரமணியம்

திருமதி பு. பா. இராச இராசேசுவரி

திரு. முருகுரத்னம்

செல்வி ஹம்சத்வனி

திரு. ஆர். குமரவேலன்

திரு. த. கு. முருகேசன்

திரு. புத்தனேரி ரா. சுப்பிரமணியன்

தனி அலுவலர் :

திரு. கி. வேங்கடசுப்பிரமணியம்

துணைத் தனி அலுவலர் :

திரு. சு. செல்லப்பன்

# முன்னுரை

உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி அறிஞர் அண்ணா அவர்கள் கவிதைப் போட்டி ஒன்றனை அறிவித்தார்கள். 'புகாரில் ஒரு நாள்' எனும் தலைப்பினையும் தந்தார்கள்; இளங் கவிஞர்காள், எழுதுக பாடல்! என்றார்கள். கவிஞர் பலர் கற்பனைத் தேர் ஏறிக் கவிதையுலகில் பறந்தனர். சுமார் ஆயிரத்திருநூறு பாடல்கள் வந்து குவிந்தன.

வந்த பாடல்களின் வரிசையறியும் பணியை மேற்கொள்ளக் குழு ஒன்று அமைக்கப்பெற்றது. கவிதையில் ஈடுபாடு கொண்ட புலமை சான்ற பலர் அக்குழுவின் உறுப்பினர்களாக இடம் பெற்றனர்; யான் அக்குழுவின் தலைவனாகும் பேறு பெற்றேன்.

கவிதைகள் அனைத்தையும் யாப்பிலக்கணச் சல்லடையிட்டுச் சலித்தோம். தேறிய பாடல்களைத் தெரிந்தெடுக்கும் பணியில் குழுவினர் பல நாட்கள் ஈடுபட்டனர்; முடிவு: மூன்று கவிதைகள் பரிசுக்குரியனவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

கவிஞர் ஏ. சண்முகம் அவர்கள் முதலிடத்தைப் பெற்று அறிஞர் அண்ணா பரிசு பெறுகின்றார்; கவிஞர் ஞானச்செல்வம் அவர்கள் இரண்டாம் பரிசும், புலவர் ந. சந்தானம் அவர்கள் மூன்றும் இடமும் பெறுகின்றனர்.

இம்மூன்று கவிதைகளோடு பாராட்டுக்குரிய சில கவிதைகளையும் சேர்த்து, ''புகாரில் ஒரு நாள்'' எனும் இக்கவிதைத் தொகுப்பு உருவாகியுள்ளது. பரிசும் பாராட்டும் பெறுபவையல்லாது எஞ்சிய கவிதைகளில் சுவையான பகுதிகளை எடுத்துத் ''தேன் துளிகள்'' என்ற தலைப்பில் சேர்த்துள்ளோம்.

இட்ட பணியை ஏற்றேன்; கவிதைகளை எடைபோடத் தெரியும் என்ற காரணத்தால் அல்ல; கவிதைகளைச் சுவைக்கும் வாய்ப்புப் பெறலாம் என்ற ஆசையால்! இயன்றதைச் செய்து முடித்தேன்.

தோழமையோடு துணைநின்ற மாநாட்டு அமைப்புச் செயலாளர், தமிழ்ப் பெரும் புலவர் மு. ரா. பெருமாள் முதலியார் அவர்கட்கும், வழிகாட்டி உதவிய என் ஆசிரியர் டாக்டர் மு. வ. அவர்களுக்கும், நான், நானாக நிற்க உதவும் என் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கட்கும் பெரிதும் நன்றியறிதல் உடையேன்.

இப் போட்டியை அறிவித்து ஊக்கமூட்டிய உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மா. முத்துசாமி அவர்கட்கும், இளங் கவிஞர்களுக்கு வாழ்த்துரைத்துள்ள முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கட்கும் தமிழ் இலக்கிய உலகு என்றும் நன்றி செலுத்தும். காவிய நடை எழுத்தாளர், கற்பனை நிறை சொல்லாளர், கலைஞர் கருணாநிதி அவர்கள் உங்களைப் 'புகாரில் ஒரு நாள்' வாழ அழைக்கின்றார் தம் அறிமுகக் கட்டுரையில்!

செல்க! சுவைக்க!

அன்புடன்,

**மா. கி. தசரதன்**

## பரிசு வழங்கியவர் :

மக்கள் திலகம்

திரு. எம். ஜி. இராமச்சந்திரன், எம். எல். ஏ.

## பரிசு பெற்றோர் :

1. திரு. ஏ. சண்முகம், குருவிக்கரம்பை, தஞ்சை மாவட்டம்.
2. புலவர் திரு. கோ திருஞான சம்பந்தன் (ஞானச் செல்வன்), திருவாரூர்.
3. புலவர் திரு. ந. சந்தானம், கும்பகோணம்.
4. திரு. இரா. முத்துராமலிங்கம் (இளந்தேவன்), சைதை, சென்னை.
5. திரு. இ. ப. சக்கரைப் புலவர், வெள்ளக் கோயில்.
6. திரு. க. நெடுஞ்செழியன், மாநிலக் கல்லூரி, சென்னை.
7. திரு. இ. அம்பிகை பாகன், தெல்லிப்பழை, இலங்கை.
8. புலவர் திரு. ஆர். கே. நாராயணசாமி (தென்மொழி), நாகப்பட்டினம்.
9. திரு. இ. நாகராசன், யாழ்ப்பாணம், இலங்கை.
10. புலவர் கி. வேங்கடசாமி, அவிநாசி, கோவை.

சி. என். அண்ணுதுரை
முதலமைச்சர்

கோட்டை
சென்னை-9

மறைந்த புலவரை மறவாது பாடிய
கிளர் கவிஞர்கட்கென்
உளங்கனிந்த வாழ்த்துக்கள்

அண்ணாதுரை.
9/1/68.

மு. கருணாநிதி
பொதுப்பணி அமைச்சர்

செயின்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை-9.

புகாரில் ஒருநாள் என்றே
போட்டியை மூட்டிவிட்டுப் பூம்
புகார்த் தமிழ் மாநாட்டில் - கவிப்
பூச்சொரிய அழைத்தார்; வாழ்க நன்று!

புதுநிலம் பிறக்க என்னும் பகைவர் புகார்-
ஆயினும்
புகுந்துவிட்ட கடல் அலையின் ஆட்சிதான் இன்று உள்ளதே!

சரித்திரத்தின் மறதியிலே தூங்கிக் கொண்டு
சித்திரத்தின் வரிகளிலே நடம்புரியும் பூம்புகாரே! உனை
சேர்த்திருந்தோர் கொணர்ந்து வந்தார் எதிரே! என் வாழ்த்து!

மு. கருணாநிதி

மா. முத்துசாமி
உள்ளாட்சித்துறை அமைச்சர்

கோட்டை
சென்னை-9

தேதி 8-1-1968

எழுத்தின் மேன்மை
வழங்கும் அண்ணா!
மணிவயிற் றுதித்த
அணிதமிழ் மாநாட்டை
செய்தனர்! அதுதான் . . . . . . . . . . . . . . . . . . . .

மெய்புகழ் கலைத் தொழில்
பூம்புகார் நிலைநாட்டும்
தீஞ்சுவைக் கவிதை
ஆக்கி யளிப்பவர்
தங்கம் பதக்கம்

வேண்டுகோள் பலர்க்கும்
ஆயிரத் திருநூறு
அறிஞர்; பலபல
வந்தன; வன்திரைக்
கடந்து வந்தன
ஆய்வு மேடையை
அழகும் திறமும்
பழக்குமக் கலைகளில்
தேன்காய்ந் தெடுத்து

பரிசு வெற்றியும்
பாராட் டடையும்
தேன்துளி யாகியும்
அவை வழங்கவே
அண்ணா அளிக்கும்
கருணை நிதியால்
இந்நூல் இறைமை
அறிவாய் புதுமையும்
தங்கம் பதக்கம்
உருக்கொளும் இந்நூல்
ஆகிய அண்ணா
தன்னில் இருந்தும்
படைத்தேன்! மகிழ்ச்சி
ஆய்ந்தவர் தமக்கும்
தேர்ந்தவர் தமக்கும்
எல்லார்க் கென்றன்

இனிப்புக் கரும்பை
வண்டமிழ் அன்னை
மாண்பார் தம்மகன்
பொட்டியோர் அறிவிப்புச்

திகழ்ந்தும் தென்னைச்
எண்ணும் பொருளில்
தேனூறு வரிகளில்
அதன்திறம் தேர்ந்து
தருவோம் என்பது!
ஆண்டோ னாக
மாக்கள் வழுத்து
அலைகடல் கடந்து
கோட்டைக் கம்பகர்
பலபல! கற்றோ
அடைந்து நின்றோ
காட்டினர்! ஆய்ந்தோர்
பரிதிக் கொடியை
நட்டினர்.

பாடும் பாடலும்
பலாச்சுளைக் கலைகளும்
தித்திப்பு வரிகளும்
அடர்சுவை வாயன!
அருமைப் பதிகமும்
கவிதை முகமனும்
வெற்றி புள்ளன!
அருங்கலை கண்டு
தந்தா தரித்தும்
கிழக்கொளிக் காரணம்
அழகு மலரும்
பொன்மலர் தன்னம்
படைத்தேன்! மாக்கள்
ஆற்றமணி தன்னில்
தூண்டின் தீட்ட
நன்றி உரியதே!

அன்பன்,

[illegible signature]

மலர்க்குழுத் தலைவர்.




## [ கவிஞர் ஏ. சண்முகம் ]

மணிமிக உடையன கதிர்நிறைந் திடுவன கலம்பல விளைவன வயல்,
வணிகமே புரிபவர் கலங்களில் உலவிட மறியலை உடையது கடல்,
மணமிக உடையன மலர்மிகுந் திடுவன மனம்கவர்ந் திடுவன பொழில்,
அணிமிக உடையன விழிகவர்ந் திடுவன பலபல நிறைந்தது புகார்!

உடலிடை உளமென உலகிடை இலங்கிய உயர்திறம் உடையது புகார்,
படைபல உடையராய்ப் படிதனை அடையினும் பகைவரும் இந்நகர் புகார்,
இடமிலை எனுமொழி இயம்பியிங் கிருந்தவர் புவிதனில் வேறிடம் புகார்,
கடலிடைப் புகுந்தது கனவென அழிந்தது கவிதனில் நிலைத்தது புகார்!

**அன்றொருநாள் :**

மேகத்தைச் சென்று கூடும் மீக்குயர் கமுகின் உச்சி
தோகையை விரித்தங் காடும் மயிலெனத் தோற்றம் நல்கும்
வேகமாய்க் கடற்க ரைக்கு விரைந்திட நாவாய் எல்லாம்
மேகத்தின் மேலு யர்ந்த கலங்கரை விளக்கம் மின்னும்!

கதிரவன் பொன்னி றத்தைக் கடலினில் வீசித் தோன்ற
எதிரவண் மருவூர்ப் பாக்கம் பொற்பணி செய்வார் வீதி
பதிலுக்குப் பொன்னி றத்தைப் பள்பள வென்றே வீசும்
அதிசயம் எங்கு மில்லா அதிசயம் அங்கே கண்டார்!

கூடங்கள் விண்மீன் வானம்! கொடிகளும் மணியும் தொங்கும்
மாடங்கள் நிலவுப் பந்தல்! மங்கையர் மாழுக் காதல்
பாடங்கள் நிறைந்த ஏடு! பரிதியின் வரவைக் கண்டு
கூடித்தான் அவர்கள் பாடும் கொம்புத்தேன் பாடல் உண்டு

காண்பவர் வியக்கும் வண்ணம் கடற்கரை ஓர மாக
மாண்புசால் யவன ரோடு வாணிகர் பிறரும் வந்தால்
நான்வர வேற்பேன் என்று நல்லவர் உள்ளம் போல
வான்வரை ஓங்கி நின்ற மாளிகை யதனில் புக்கார்!

சாலையில் கஞ்சி யாறு தான்நடக்க கவண்டு பாடும
சோலையின் மரங்கள் யாவும் சந்தனக் கடையின் தூண்கள்!
காலையில் தொடங்கும் நாளங் காடியில் மணியும் முத்தும்
மாலைகள் ஆகித் தொங்கும் மணவறை போல மின்னும்!

வணிகம்செய்ய வந்த அயலவர் தெருவில் வந்து
மணிகளின் குவியல் கண்டார்! மலைகளோ எனவி யந்தார்!
அணிகள், பொன் னுடை கண்டார் அசைந்திடும் காற்றை ஒத்த
துணிகளும் மணியின் வீச்சால் சுடர்விட மயங்கி நின்றார்!

யாம்பழ நிறத்தை ஒத்த வடமலைப் பொன்னைக் காட்டித்
தாம்விலை பகர்வோர் ஓசை! தண்மதி நிறமுத் தாலே
ஆம்பல்வாய் திறந்த வண்ணம் அதைவிலை கேட்போர் ஓசை!
பூம்புகார்க் கடலைப் போலப் பொழுதெலாம் ஒலித்தி ருக்கும்!

வடவஜ்ர வென்று வேந்தன் வாங்கிய முத்துப் பந்தர்
உடன்திகழ் நல்ல பட்டி மண்டபம் ஒருங்கே சோழன்
அடிதனில் பகைவர் வைத்த தோரண வாயில் கண்டு
படிதனில் மிக்கு யர்ந்த பட்டினம் புகாரே என்றார்!

நிலையிலாச் செல்வம் தன்னை நிலையென எண்ணித் தானே
அலைகடல் தாண்டி வந்தீர் அள்ளியே கொள்வீர் என்று
கலைகளால் உயர்வு பெற்ற காவிரிப் பட்டி னத்து
நிலமகள் சுமந்து நின்றாள் நீங்காத செல்வம் தன்னை!

பன்னிற மலரின் கூட்டம் பார்ப்பவர் விழியை ஈர்க்கும்!
செந்நிறப் பவளக் கோவை சிந்தையைச் சேர்த்தி ழுக்கும்!
கண்கொளாக் காட்சி அவ்வூர்க் கடைத்தெருக் காட்சி வேற்றார்
மண்கொளப் புகுதற் கஞ்சும் மன்னவன் ஊரின் மாட்சி!

புலிக்கொடி ஏந்தி நின்ற புகாரின்நல் வேந்தன் வாளால்
பலிக்கொடி யாகிப் போன பகைவரின் கொடிகள் எல்லாப்
எலிக்கடி பட்ட ழிந்த எளியவர் துணிகள் போல
வலைக்கொடி யாகி நிற்க வணங்கினர் கப்பம் கட்டி!

தேர்த்தடம் பதிந்த வீதி! திருநாட்டின் வேந்தன், வீரர்
ஏர்த்தொழில் வல்லார், ஆடல் இயற்றுவோர், வணிகர் வாழ
நீர்த்துளி நங்கை ஈன்ற நிகரிலா வான வில்போல்
போர்த்தொழி லாளர் செங்கைப் போர்வில்லும் வாளும் மின்னும்

பட்டினப்பாக்கம் வேற்றூர்ப் பட்டினக் காரர் வந்தால்
பட்டினைப் பொன்னை நல்கிப் பசியையும் போக்கும் பாக்கம்
பட்டினப் பாக்கம் பண்பார் மருத்துவர் கலையால் திக்காம்
எட்டிலும் புகழைப் பெற்றார் இலங்கிடும் பாக்கம் தன்னில்

கணிகையர் இருப்பி டத்தில் காண்பவர் வியக்கும் வண்ணம்
மணிகளால் அழகு செய்த மாடியின் நிலாமுற் றத்தில்
வணிகனின் மைந்த னை கோவலன் வரவை வேண்டி
இனியசொற் கடிதம் தீட்டி ஏமாற்றம் பெற்ற தாலே

மலையினில் பிறந்து நல்ல மண்மிசைத் தவழ்ந்து பாடும்
அலைகடல் கலந்த பொன்னி ஆற்றினைப் போல ஆடற்
கலையினில் தேர்ச்சி பெற்றுக் கலைக்கடல் கலந்த தாலே
தலைக்கோலாம் பட்டம் பெற்ற மாதவி தவித்தி ருந்தாள் !

**அதே நேரத்தில் மற்றொரு புறம் :**

கண்டதோர் கனவைக் கூறிக் கண்ணகி கலங்கும் காலை
பண்டையோர் நோன்பு பொய்த்தாய் பயன்பெறக் காம வேளைச்
சென்றுமே தொழுவோம் என்ற தேவந்தி சொல்ம றுத்து
நன்றல என்றி ருக்கக் கோவலன் வந்தான் நாடி !

வறுமையைக் காணா ஊரில் வறுமை யைப் பெற்ற தாலே
சிறுமையாம் வெம்மை பெற்றேன் செல்வமே! நிழலே! என்றான்.
பெருமையில் நிகரில் லாத சிலம்புள பெறுவீர் என்றாள்.
மறுமுறை செல்வ னை மதுரைக்குச் செல்வோம் என்றான்!

அணில்வாலைப் போன்ற மீசை அமைந்தநற் புலவர் நெஞ்சம்
பணிந்துபோய் உறங்கும் நேரம்! பால்நிலா வானில் வந்து
தணிந்திடா ஆசை யாலே தன்முகம் பொன்னி யாற்றின்
மணிநீரில் பார்த்து விட்டு மயங்கியே மறைந்த நேரம்

பூம்புகார் தன்னை விட்டுப் போகின்றார் இருவர் அந்தோ!
தேம்பியே கடல லைக்கச் செல்வச்சீர் குடியின் றாரைப்
பூம்புகார் மண்ண ழைக்கப் பூங்காற்றும் தான ழைக்க
மாம்பிஞ்சு வடுக்கண் ணாளாம் மாதவி யாழ்அழைக்க,

தீம்புனல் பொன்னி யாற்றின் திரையெலாம் அழைக்கக் கொங்கைச்
சூம்பினை மயங்கி விட்ட கடும்பசிக் குழந்தை யைப்போல்
பூம்புகார் தன்னைச் செல்வ புரியினை விட்டுச் சென்று
நாம்இனி வாழ்வோ மென்றார்! நடக்கின்றார் முடிவை நோக்கி!

பிறநாட்டு வணிகர் வந்து பெரும்பொருள் ஈட்டிச் செல்லத்
திறல்நாட்டு வணிகன் மைந்தன் திருவினைத் தேடற் கென்று
புறநாட்டிற் போன வந்நாள் பூம்புகார் வரலாற் றின்கண்
கறைபட்ட ஒருநாள் துன்பக் கண்ணீரைத் துடைப்ப தென்றோ?




[புலவர் கோ. திருஞானசம்பந்தன்]

காவிரிப்பூம் பட்டினத்துக் கடற்கரையில் அன்றொருநாள்
பூவிரியும் சோலைகளின் புதுமணத்தை அள்ளியுண்டு
மாலைப் பொழுதினிலே மணற்பரப்பின் மேலமர்ந்து
தாலை அசைத்தொரு தமிழ்ப்பாட்டுப் பாடலுற்றேன்
பாட்டின் சுவையாலோ பைந்தமிழின் திறத்தாலோ,
கூட்டும் எழிலெல்லாம் கொண்டவிளம் பெண்ணொருத்தி
இளநகை காட்டியென்றன் எதிரிலே வந்துற்றாள்!
குளக்கமல முகமலரக் கொவ்வை இதழ்துடிக்க
வணக்கம் எனவுரைத்து வளக்காந்தள் கரங்குவித்தாள்!
இணக்கமுறும் அவளழகில் ஈடுபட்டுப் பேசலுற்றேன் :
''பெண்ணரசே! பேரெழிலே! பேசும்பொற் சித்திரமே!
விண்ணரச மகளோ நீ? விளங்க வுரை''யென்றேன்.
''பூம்புகார் மங்கையான் பொய்யுரையேன் உமக்கிந்தப்
பூம்புகார்ச் சிறப்பெல்லாம் புலப்படுத்த வந்தேனால்!''
''நல்லதம்மா நானுமொரு நற்றுணையைத் தேடித்தான்
மெல்ல இவணிருந்தேன் மெல்லிழையே நன்றி''யென்றேன்
''வீண்பேச் சினியெதற்கு? விண்டுரைக்க மாட்டாத
மாணுயர்ந்த பூம்புகார் மாண்புகளைக் காட்டிடுவேன்;
பட்டினம் என்றாலே பூம்புகார்ப் பட்டினந்தான்!
தட்டில்லை! தடையில்லை! தவறில்லை; ஆதலினால்
இந்நகரார் வாழ்வதற்காய் எவ்வூரும் புகாரே!
என்பதன்றோ இவ்வூருக் கேற்ற பெயராகும்!
எழிலின் திருவுருவாய் ஏழிசைக்கு நாயகியாய்
அழிவறு கூத்தியலின் ஆரணங்காய் அரங்கேறிப்
பண்ணான்கும் கூத்துப் பதினொன்றும் திறங்காட்டி,
கண்டார்கள் உள்ளமெல்லாம் கவர்ந்த கலையரசி!
கானல் வரிபாடிக் காதலனைத் தானிழந்தாள்
தானோர் பிழையறியாள் தகவுடைய மாதரசி
மாதவியாள் நடமிட்ட மாமலர்ப்பூஞ் சோலையிது!

காதம் பல கடந்து கலங்கள் பலவந்து
நிற்கும் துறைபாரீர்! நெடுங்கலங்கள் கொண்டுவந்த
முத்தும் பிறபொருளும் மொய்த்துள்ள திறம்காணீர்!
கொண்டுவந்த பொருள்மீது குத்துகிறார் புலிச்சின்னம்!
பண்டங்கள் கொண்டுசெலும் பரந்த கலமிவையாம்!
ஆங்கொருபால்,

காவிரிப்பெண் தன்கணவன் கடலோடு கலப்பதுவும்
மேவுகடல் அலைக்கரத்தால் மெல்ல அணைப்பதுவும்
கண்டீரோ'' என்றென்னைக் கடைக்கண்ணால் தான்கண்டாள்!
''கண்டேன்'' என்றவள் கண்களையே யான்கண்டேன்!
''இருபத்தொரு நாட்கள் இந்திர விழாநிகழும்
பெருநகரை இருபிரிவாய்ப் பேசுதலும் அறியீரோ?
மருவூர்நற் பாக்கமிது மாநகரின் ஒருபிரிவு;
பெருநிலா முற்றமொடு பேசுமெழில் மாளிகைகள்
பயன்தொலை யறியாத பல்யவனர் இருப்பிடங்கள்
நயத்தபல நாட்டினர்கள் நன்குசெறி கரையிருப்பு!
சுண்ணமும் சாந்ததுவும் சூழ்புகையும் பூவுடனே
வண்ணமும் விற்போர்கள் வந்துலவும் பெருந்தெருக்கள்!
பட்டெலி மயிராடை பருத்தியுடை நெய்வார்கள்
இட்டமுறு பொன்னும் எடுத்தபிற மணிவகையும்
சந்தனமும் அகிலுமெனச் சார்ந்த வளப்பொருள்கள்
இந்த அளவினதென் றெண்ணரிய ம்றுகுகளும்
எண்வகைக் கூலங்கள் இனிதுவிற்கும் அங்காடி
இன்னபிற சூழ்ந்துள்ள இப்பகுதி நீங்கிடுவோம்!.
அப்பாலே
பட்டினப் பாக்கமுண்டு பார்த்திடுவோம் வாரீரோ!
கட்டிடம் பலசார்ந்த கடிநகர்ப் பகுதியது!
அரசப் பெருந்தெருக்கள் அருமறையோர் உறைவிடங்கள்;
பரசும் பெருவணிகர் பல்குமெழில் மாளிகைகள்;
தேரோடும் வீதிகளும்; திருமணிகள் குயிற்றுநரும்,
பார்காக்கும் உழவினரும், பல்பிணியும் தீர்ப்பவரும்
நேருறவே சோதிடங்கள் நிலைமொழியாற் கூறுநரும்
ஏருறவே சித்திரங்கள் இனித்தமுடைச் சிற்பங்கள்
வல்ல பெருங்கலைஞர் வாழ்கின்ற வளமனைகள்
பல்கியுள வீதிகளும் பார்த்து மகிழ்ந்திடுவீர்!
இவ்விரண்டு பாக்கங்கள் இடைப்பட்ட பெருநிலத்தில்
செவ்வியநா ளங்காடி திகழும் வகைகாணீர்!
அல்லங் காடியென அமைந்த இராக்கடைகள்
பல்பொருளும் கொண்டுதிகழ் பான்மையினைக் காண்பீரே!
அங்காடி வாயிலுற்ற அழகார் திரைச்சீலை
இங்கிந்தப் பொருளுண்டென் றியம்பும் திறமென்னே!
இவையன்றி,
முத்துநற் பந்தரொடு பட்டியுரை மண்டபமும்

வாயிலின் தோரணமும் வரிப்பொருளாய்க் கரிகாலன்
பெற்றுவந்த புகழ்க்குரிய பீடுகெழு சின்னங்கள்
உற்றிங்கே திகழ்கின்ற உயர்வுதனை என்சொல்வேன்!
கள்வோரைப் பிடித்தவர் கழுத்தில் சுமையேற்றும்
வெள்ளிடை மன்றமெனும் வியப்புடை மன்றமுண்டு!
கூனர் தொழுநோயர் குளத்தில் முழுகிவந்தால்
ஈனம் தனையொழிக்கும் இன்னிலஞ்சி மன்றமுண்டு!
நஞ்சுண்டார் பேயுற்றோர் நாடி வலம்வந்தால்
விஞ்சு துயர்நீக்கும் நீணெடுங்கால் மன்றமுண்டு!
பொய்த்தவ வஞ்சரையும், பொய்யொழுக்கப் பெண்டிரையும்,
பொய்க்கரி புகல்வரையும், பிறர்மனை நயப்பரையும்,
துணிவுடனே வஞ்சிக்கும் தூய்மையிலா அமைச்சரையும்
பிணித்துக் குரலெழுப்பும் பெரும்பூதச் சதுக்கமுண்டு!
அரைசுநெறி தான்தவறின் அறங்கூறும் அவையத்தார்
உரைசிறிது கோடினும் உள்ளம் மிகவருந்திக்
கண்ணீரைச் சிந்தித்தன் கருத்தைப் புலப்படுத்தும்
பண்பில் திரியாத பாவைமன்ற மிங்குண்டு
நாமினிமேல்,
மக்கள் பலர்வாழும் மறுகுகளைச் சென்றடைவோம்;
தக்கநற் பட்டாடை தமைக்களைந்து பருத்தியுடை
பூண்ட இவரெல்லாம் பொங்கும் நிலாவழகில்
தூண்டும் மகிழ்வினராய்ச் சிவல், கடா, மோதவிட்டும்
மற்போரில் ஈடுபட்டும் மனம்துள்ளக் கடல்படிந்தும்
உற்சாக முடன்வாழும் ஒப்பரிய காட்சியிதே!''
என்றுரைக்க, நானுந்தான் ''ஏந்திழையே நீயெனக்கே
என்றுந் துணையாவாய்'' என்றுசொலி அணைத்திட்டேன்;
'ஒன்றுமிலை'— வெறுந்தரையில் உருண்டு கிடந்தேனால்!
கண்டதெலாம் கனவென்று கருத மனநெகிழ்ந்தேன்!
பூஞ்சோலை தானில்லை; பொட்டல் மணல்வெளிதான்!
மாஞ்சோலை, மாளிகைகள், மாடங்கள் ஏதுமிலை!
விண்ணை மறைப்பதற்கோர் மேற்கூரை யில்லாது
கண்ணகி சிலையொன்று கவினிழந்து நிற்பதுவும்
சீர்நகரம் இன்றோர் சிற்றூராய் நிற்பதுவும்
யாரிடத்துச் சொல்லிடுவேன் யான்!

# முன்நீற்கச் செய்வோம் முனைந்து

[புலவர் ந. சந்தானம்]

பொன்னாய் மணியாய்ப் புலவரெலாம் பாட்டெழுத
என்கவிதை யும்இரங்கி ஏற்பாயே — அன்னாய்
அமிழ்தன்ன சொல்லாலும் அரும்பொருளும் சேர்ந்த
தமிழ்தன்னை என்நாவில் தந்து.

[கடலின் கரையில்]

பூவிரித்துப் பொன்விரித்துப் பூவுலகில் பாவலரின்
பாவிரித்து நாட்டின் பயன்விரித்துப் பாய்ந்தோடிக்
காதலனைக் கண்டவிளங் காரிகைபோல் காவிரியாள்
போதந்து புன்னகைப்பப் பொங்குங் கடலரசன்

வா!வந்து நின்காதல் தா!வென்று வலை வீசி
மேவுந்தன் கைகளினால் மெல்லிடையா ளைத்தழுவக்
கண்டுகேட் டுண்டுயிர்த்த காதற் பெருமையென
விண்படர்ந்து சென்றதுவே வீங்கும் அலைவெள்ளம்!

[கவிஞன் கண்ட கனவு]

காலமெனும் கல்நெஞ்சன் கைகளிலே சிக்கியதால்
கோலமெலாம் குன்றிக் குறுகியதோர் சிற்றூராய்ப்
பொன்கோடி ஈந்தாலும் போய்ப்புகார் வேறிடத்தில்
என்றபெயர் மாறிவிட, இன்றெவரும் வந்துபுகார்
என்றபெயர் தாங்கி இருக்கும் புகார்தனிலே
நின்றிருந்தேன்! நெஞ்சில் நினைவலைகள் தாலாட்டக்
கண்துயின்றேன்! கண்ட கனவுகளோர் ஆயிரமாம்!

[கரை கண்ட கரிகாலன்]

பண்துயின்ற பாடல் பசுந்தமிழால் வாழ்வதனால்
வீரத்தைக் காட்டி விரும்புகவி வாணரிடம்
ஈரத்தைக் காட்டி இமயப் புகழ்காட்டிக்
காவிரிக்கு நல்லகரை கண்ட கரிகாலன்

பூவிரிக்கும் மஞ்சத்தில் பொற்கவரி நின்றசைய
என்னே வியப்பன்னான் ஏந்தும் திருமார்பில்
பொன்னூர்ந்த பாதத்தால் புக்குதைத்தான் ஓர்சிறுவன்!
போரென்று நிற்கும் புரவலனின் தோற்றத்தில்
ஈரத்தைக் கண்டேன்நான் இல்லறத்தின் பீடுணர்ந்தேன்!

[கடல் வழி வந்த பொருள்கள்]

ஏழுமலை யென்றே இலக்கியங்கள் போற்றுமவை
தாழுமலை யாகத் தடைமீறி வானுயர்ந்து
நிற்கின்ற பண்டங்கள் நீள்கடலில் வந்திட்ட
பொற்குன்றம் அன்றோ!

[புலிக் கொடி]

புறவுலகில் என்றும்
கலிக்குப் பகையென்று காட்டிப் பகைவர்
பலிக்கென்று பாய்ந்தசையும் பாரீர் புலிக்கொடியை!

[மகிழ்ச்சி வெள்ளம்]

பொற்பெல்லாம் தேக்கும் புகார்நகர வீதியிலே
கற்பெல்லாம் தேக்கிக் களியூட்டும் பெண்களினம்
வெற்பெல்லாம் தேக்கி விளையாடும் வீரர்கள்
மற்றென்ன வேண்டும்? மகிழ்ச்சிப் பெருவெள்ளம்!

[வளம்]

நீரின் வளத்தால் நிலவளமும் வானத்தில்
காரின் வளமும் கவின்சேர் குடிவளமும்
பொங்கும் குடிவளத்தால் போற்றுசெங் கோல்வளமும்
தங்கும் புகழ்வளமும் தாங்கும் புகார்நகரம்

[கண்ணகி சொன்ன திறம்]

எத்தனையோ தோற்றங்கள் என்கனவில் நான்கண்டேன்
மத்தளமும் யாழும்சேர் மாதவியின் நாட்டியத்தால்
கோவலன் செல்லக் கொடியிடையாள் கண்ணகி, தன்
காவலனை நோக்கியெதிர் காத்திருந்தாள் அவ்வேளை
பொன்னெல்லாம் போகப் புகழ்போகக் கண்ணகியின்
இன்னலும் போக எதிர்வந்த நாயகனை
இன்னமும் என்கால் எழிற்சிலம்பு கொள்கவெனச்
சொன்னதிறம் கண்டேன்!

[தவம் செய்யும் நங்கை]

சொக்கவெள்ளிப் பாற்குடமாய்ப்
பந்தாடும் வெள்ளலைகள் பாயும் கடற்கரையில்

வந்தாலும் நாயகற்கு வாழிதவம் செய்திருக்கும்
நங்கையை நான்கண்டேன்

[பெண்மையும் தாய்மையும்]

நல்லபெரும் போரினிலே
செங்கை சிவப்பச் சிலவீரர் கொண்டுவந்த
தந்தத்தால் தொட்டிலில் தங்க வடம்சேர்த்தே
எந்தாய் உறங்குக! என்மகனே தூங்கென்று
முந்தையோர் வீரம் முழுவதையும் தாலாட்டிப்
பாலூட்டி இன்தமிழைப் பாலோடு சேர்த்தூட்டி
மாலூட்டி நிற்காமல் மாவீரம் தானூட்டிப்
பெண்மை வளர்ந்து பெருந்தாய்மை யாய்நிற்கும்
வண்ணமும் கண்டேன்

[வீரர்கள்]

வளர்புகழின் வீரர்கள்
நாட்டிற்கு நல்லுடலை நாயகிக்கே தம் நெஞ்சைக்
காட்டும் திறன்கண்டேன்

(மாடங்கள்]

கட்டியநல் மாடங்கள்
சேவல் எனநிமிர்ந்த சீரான தோற்றத்தால்
ஆவல் எழுப்பும் அழகுணர்ந்தேன்!

[வாணிகம்]

வீதியினில்
பொன்னோ மணியோ புனைவடமோ மற்றுமுள
தென்னோ அவையெல்லாம் இங்குண்டாம் இந்நகரில்
இல்லாத தொன்றில்லை இந்நகரின் மாண்புகளைச்
சொல்லாதா ரில்லையினிச் சொல்வதற்கும் எல்லையிலை!

[நனவு]

கண் விழித்துப் பார்த்தேன் கனவெல்லாம பொய்யாக
மண்ணிட்டு மேடான மாநகரை நான்கண்டேன்

[அன்றும் இன்றும்]

விண்முட்டும் கோபுரங்கள் வீதிகள் பூங்காக்கள்
எண்ணிக்கை யில்லா இவையாவும் மண்கொள்ளக்
கீற்றுக் குடிசைகளும் கீழ்நோக்கும் தென்னைகளும்
நாற்றும் வளராத நன்செய்யும் நான்கண்டேன்!

[தமிழர் கடன்]

பொற்கால மேன்மையெலாம் பொய்யில்லை என்றெடுத்துத்
தற்காலம் காட்டல் தமிழர் கடனன்றோ!

ஆய்வோம்! அகழ்ந்தெடுப்போம் அந்நாளின் வண்ணங்கள்!
ஓய்வோம் எனவுரையோம்! ஒன்றுபடும் உள்ளத்தால்
சாகாத சின்னங்கள் சான்ருகக் காலத்தால்
போகாத வண்ணம் புதுமைகள் செய்திடுவோம்

[நம் கடமை]

மண்ணை யொதுக்கி, மறைந்திட்ட பேரழைகைக்
கண்ணின் விருந்தாக்கிக் காட்சிப் பொருளாக்கி
எந்நாட் டவரும் இவண்வந்து பர்ர்த்தவுடன்
செந்நாத் தடுமாறச் சிந்தை வியப்படைந்து
முன்னுள் தமிழர்தம் மூதறிவைத் தாமுணர்ந்தே
எந்நாளும் போற்ற இவைசெய்தல் நம்கடமை!

[பார்க்கும் நாள் வருமோ?]

அந்நாள் இருந்த அழகுத் துறைமுகத்தை
இந்நாளிற் கண்டால் எழில்போன வெற்றிடமாய்க்
கப்பல்கள் நின்றவிடம் காட்டுப் புதர்வளர்ந்து
வெப்பப் பெருமூச்சாய் வேதனைதான் மேலோங்கும்!
விண்ணிற் படர்ந்துவரும் விஞ்ஞானக் கண்கொண்டு
மண்ணில் இதற்கேற்ற மார்க்கந்தான் காணுேமோ?
சீரோங்கு நன்னகராய்ச் சீர்த்த துறைமுகமாய்ப்
பாரோங்க நிற்பதையும் பார்க்கும்நாள் வந்திடுமோ?
முன்வந்தால் பாரில் முடியாத தொன்றில்லை
பின்வாங்கு வோமோ? பெருமைசேர் நம்பணியில்!

[முன் நிற்கச் செய்வோம்]

பொன்நின்று வாழ்ந்த புகார்நகரைப் பூவுலகில்
முன்நிற்கச் செய்வோம் முனைந்து.

[முடிவுரை]

கடல்கொண்ட வெள்ளம் தன்னைக்
கைகளால் எடுத்தல் போல
அடல்கொண்ட வீரர் வாழ்ந்த
அரும்புகார்ப் பெருமை யெல்லாம்
மடல்கொண்டு தீட்ட லுற்றேன்
மாளாத செயல்என் ருலும்
திடங்கொண்டு தமிழிற் சொன்ன
தெளிவினுல் மகிழ்கின் றேனே!



# இன்பபுரி

## [கவிஞர் இளந்தேவன்]

கூவத் துடிக்கும் குயிற்குஞ்சுப் பாவலன்நான்
தாவத் துடிக்கும் தளிர்மேனி மான்குட்டி!
எண்ணப் பறவைக் கிறக்கைக் கொடுத்துவிட
விண்ணின் பரப்பு மிகச்சுருங்கி விட்டதுவால்
காலக் கடல்கடந்தேன் காவிரியாள் கீழ்த்திசையில்
நீலக் கடல்இலக்கும் நீண்டவெளி வந்தடைந்தேன்.

[நெய்தற் புகார்]

தங்கக் கடலில் தளிர்த்ததொரு வெள்ளிமலர்
வங்கக் கடல்மேலே வட்டக் கதிர்வந்தான்.
நீலக் கடலலைகள் நீட்டி முழக்கியிசை
ஞாலப் பெருநகராம் நல்லபுகார் வாழ்த்துரைக்கும்.
காலைப்பெண் சூல்கொள்ளக் காணும் இடந்தோறும்
ஞாலத் துயிர்த்துடிப்பு நாற்றிசையும் இன்பமயம்!
கட்டெறும்புக் கூட்டம் கலிங்கத்து மெல்லாடை
ஒட்டி வருதல்போல் ஓடங்கள் வந்தனவே.

[கடல் வாணிகம்]

வாழ வழிகூறும் வணிகப் புகார்கொண்ட
சோழர் துறைமுகத்தைச் சூழ்ந்தபல கப்பல்களில்
பொன்னை யிறக்கிப் புரவிகளைத் தந்துவிட்டுக்
கன்னற் றமிழின் கலைப்பொருளை, ஆடையினைத்
தந்தத்தை முத்தைத் தமிழ்மணக்கும் ஏலத்தைச்
செந்தேன் மயிலிறகைச் சேர்த்து வகைப்படுத்திப்
புத்தேள்நாட் டுப்புறத்தைப் பொற்றமிழர் வாழ்க்கையினைக்
கத்துங் கடல்விட்டுக் காணப் புறப்படுவார்.
சாலை வழியெல்லாம் சங்கத் தமிழ்முழங்குக்
காலைச் சிறுபறவை கண்டேன் அடடாவே!

[கோட்டையும் கொடியும்]

நெடிய வெற்பது கோட்டை யானதோ!
நீண்ட வாழ்கடல் அகழி யானதோ!
கொடிய வெம்புலி வீர மானதோ!
கோட்டை வீரராய் நிமிர நின்றதோ!
நீள வான்வெளிப் புள்ப றந்திடும்
நீண்ட வெம்புலி பறக்குமோ?
சால விந்தையே இப்பு காரினில்
சாற்ற வோமொழி யறிகிலேன்!

[உட்புகார்]

உட்புகார் மாற்றலர் உட்புகார் என்றெண்ணி
உட்புகார் வந்தேன் உலவுகின்ற வீரரைக்
கள்ளருந்திச் செல்லும் கவின்யவன மக்களினைத்
துள்ளிவரும் காவிரியில் தோன்றுங் கிளைநீரைப்
புத்த மடங்களினைப் போதவிழ்ந்த தாமரைசூழ்
புத்தம் புதுநீர்சேர் பொய்கையைத் தேருரும்
வீதிகளை யாங்கே விளங்குமெழு மாடத்தை
யோதுந் தமிழ்மறையை யோங்கு பலதொழிலும்
கூடிப் புரிவோரின் கூட்டத்தைப் பன்னூட்டார்
பாடிப் பரவும் பசியவளக் காட்சியினைக்

கண்டுநா ளங்காடி காணப் புறப்பட்டேன்
எண்டிசையில் இவ்வுலகில் எங்கிருக்கும் மக்களிவர்?

வந்தார் வளந்தன்னை வாழ்த்தப் பெருமூச்சுத்
தந்த சுழல்வானில் தனிமேக மானதுவே!

எத்தனை திசைவிளையும் எத்தனை பொருட்களுள
எத்தனை விதங்க ளுளவோ
அத்தனை திசைப்பொருளும் அத்திசை யுறைந்தவர்கள்
அக்கடல் நகர்ப ரப்புவார்.

ஆடை யாயிரங் கோடி பாரவை
அணிந்த பேரழில் விதங்கள்பார்!
மேடை மீதினில் மேலே நாட்டினர்
விரித்து வைத்தவு மரியபார்!

உலக நாணயம் யாவு மிங்குபார்!
உரிய தாய்மொழி வகையு மிங்குபார்!
கலகம் நீங்கிய ஞால மொன்றெனுங்
கவிஞர் பாடலின் கருத்து மிங்குபார்!

கயல்விழி ஒளிவிட ஒளிவிடக்
கலைமதி முகமென முகமென
அயலவர் உயிரற உயிரற
வழகியர் உலவரண் மனைகளே!

குயிலொடு கிளியுறை பொழில்களில்
குளிர்நதி யுடலினர் மெதுநடை
பயிலுவர் அவர்நடு வரசியர்
பருகுவர் அருந்தமிழ் விருந்தரோ

அறவிழி; அடுபகை பொருதிறம்;
அலைகடல் எறிதரு திரள்புயம்;
மறவினை முடியுரம்; நடமிடு
மறையெனு மரசரும் வருகிறார்

தமிழுயிர்; தரையுயிர் உடலெனத்
தமதுயிர் தருதிட மறந்தவர்,
அமிழ்தெனுஞ் சுவைமொழிக் கலைஞரும்
அறிஞரும் அவருடன் வருகிறார்

மதிதனை விண்வெளிக் கண்டதால்
மரையது குவிதலை ஒப்பவே
மதிபுரை வேந்தனைக் கண்டதும்
மன்னவர் கரமலர் கூம்புமே.

பாரி லாயிரம் மன்ன ரிப்புகார்
பதைத்து நற்றிறை கட்டினர்
போரி லாதநாள் வேண்டுமே யெனும்
புனித நோக்கிலோ கட்டினர்?

ஈழங் கடாரம் இமயங் குமுமி
வீழத் திறைகொண்டு வீரம் விளைத்தோர்
அறங்கூ றவைவிட் டரும்வீரர் காட்டும்
மறங் காணச் சென்றேன் உடன்.

நெடிய வேல்களும் நீண்ட வாட்களும்
நிலைபு துக்கிடல் கேட்டவர்
கொடிய வேங்கையைக் கண்ட வாடெனக்
குலைந்து தந்திறை கட்டுவார்!

வீழ மன்னவர் கோட்டை மாமுடி
விருது பட்டமும் போக்கிடும்
வேழ மாயிரம் வேலை யற்றதால்
வெறித்து நோக்குதல் பார்மினே!

தளைகள் சூடினர் பகைவர் என்றநற்
றன்மை சேர்த்தபல் லானைகள்
தளைகள் சூழவே யசையும் இப்புகார்
தன்னில் நீதியும் இல்லையோ!

ஏதம் ஆற்றிய குடிகளை
யெடுத்து வாயினுள் இடுமெனும்
பூதம் நின்றது; சதுக்கமே
பொருந்து வார்தொகை பெரியதே!

காவ மாகடல் நீந்தியுங
காட்சி யாகுவேன் என்பதாய்
ஞால மீதினில் நின்றதே
நல்ல தாற்றிடும் பூதமே.

கொன்ற மன்னவர் மூளை நெய்யினில்
குடல்வி ளக்கினை யேற்றவே
நின்று சூளுரை செய்யு வோரது
நிறைந்த வஞ்சினம் கேண்மினே.

உட லுழுத தங்கள்
உயர்கொழுநர் கிளைக்
கட லுழுது சென்றார்
கடிதுவரச் சொல்லி
மடலெழுது வாரின்
மனமெழுதல் போல
உடலழலில் வீழ
உயர்பரிதி சாகும்.

காவலர் பாய்ந்து சாடும்
களத்துப்போ ரொன்று; கற்ற
பாவலர் சொல்லின் அம்பால்
படைத்தபோ ரொன்று; நல்ல
காதலர் கூடிச் செய்யும்
கலவிப்போ ரொன்று பாரீர்
மூவகைப் போரு முண்டு
முடிந்தபோ ரொன்றுங் காணோம்!

கடற்பிறந்த செல்வமொடு காவிரிபால் ஊட்டும்
இடப்பரப்பின் செல்வம், இவைபரப்பும் மாலைக்
கடைவரிசை வந்திருந்த காதல் மடவாரின்
உடைபறக்கக் கண்டென் உயிர்பறக்கக் கண்டேன்!
எச்சில் அறியா விளநீர்க் குலையடக்கக்
கச்சறுந்து போகுமெனக் கச்சணியாக் காரிகையார்
காதற் கொழுநர் கவின்தோளே கச்சாக
ஈதலினை வேண்டி யிருந்தாரோ கச்சிழந்து!

வான்வெளியில் மின்மினிகள் வாவென் றழைப்பதற்
கேனென்று கேட்கும் எழில்விளக்கைத் — தான்கொண்ட
''பூம்புகார் 'மண்ணில் பொலிகின்ற யின்பபுரி'
யாமென்றே யெண்ணும் மனம்.

காலமெனும் மாயக் கலைப்பெண்ணின் தொட்டிலிலே
நீலக் கடலுன்னைத் தாலாட்ட — ஞாலத்தில்
நீயுறக்கங் கொள்கின்றாய் நின்றுயிலை நீட்டாதே
நீயுறங்கின் ஆரெழுப்பக் கூடும்?




**[ சக்கரைப் புலவர் ]**

பூம்புகார் என்னும் புதுமைப் பதியதனைத்
தீம்புகார் என்று சிறப்பித் துரைத்தகதை
ஏட்டில் படித்துவிட்டே யின்பமிகக் கொண்டதுண்டு!
கேட்டுப் பெருமை கிளர்ந்தெழவே, யந்நகரைப்
பார்த்துச் சுவைநுகரப் பாவிக் கடவுளவன்
பார்த்தே யெனதுயிரைப் பல்லாண்டு முன்பாகக்
கூட்டில் அடைக்காக் கொடுமையினை நான்நினைந்தே
வீட்டில், அகலின் வெளிச்சத்தில் கண்ணயர்ந்தேன்!
கொஞ்சம் பொழுதேதான் கூடிடுமுன் நானந்த
நெஞ்சி லினிக்கும் நிகரில்லாப் புகார்நகரில்
நிற்ப தறிந்து நினைவுதடு மாறிவிட்டேன்!
அற்புதங்கள் கோடி! அழகுபல கோடியெனச்
சொற்களினால் சொல்லிச் சுருக்கமுடி யாச்சிறப்புப்
பொற்புடைய வந்நகரின் பொலிவை யனுபவித்தேன்!
மாமன்னர் வாழுகின்ற மாளிகையும்; ஆளுமந்தப்
பூமன்னர்க் கொப்பாய்ப் புகழில் பெருமறிவில்
மேம்பட்டோர் வாழுகின்ற வீதிகளும்; மென்மைமிகும்
ஆம்பல் மலரொத்த வழகுக் கலைஞர்களும்
கொண்டு திகழக் கொடிமரங்கள் வான்முட்டப்
பண்டு புகழ்படைத்த பாக்கமிது வெப்பாக்கம்
என்றால் இதுவே யினியபட்டி னப்பாக்கம்
என்று புரிந்தவுடன் என்னே உவகைகொலோ!

(வேறு)

வேழமாமென வீரமாநடை யோடுலாவிடும் வீரர்கள்;
சோழமாபுவி மாடம்யாவிலும் ஊடலாடிடும் மாதர்கள்!
வாழவேயென நாடுமாறிய வாணிபர்குடி மாந்தர்கள்
ஏழுலோகமும் தாழவேதலை தானுயர்கலை வாணர்கள்!

(வேறு)

பூவெலாம்விலே கூறிடும்பலர்; நாடெலாம்கடந் தேறினர்பலர்!
நாவெலாம்தமிழ் ஊறிடும்பலர்; நாளெலாமறங் கூறிடும்பலர்!
காவலாடிடும் வீரரோபலர்; காணுமேழையர்ச் சோறிடும்பலர்!
சேவலோன்கொடி ஏற்றிடும்பலர்; செல்வமோதின மேறிடும் பல!

(வேறு)

வெற்றிபல கண்டவர்கள் தங்கள் வெற்றி
விருதுகளை வெளியார்க ளுணர்தல் வேண்டிச்
சுற்றிலுமே நட்டிருக்கும் கொடிகள், வெய்யோன்
சுடுகதிரே தரைபடுதற் கஞ்சச் செய்யும்!
மற்றபுறம் ஏழையர்க்கென் றுக்கும் சோற்றில்
வடித்தகஞ்சி வெள்ளமெலாம் காய்ந்து சாம்பற்
பற்றுகிக் குன்றுகும்; நீற்றில் தோய்ந்த
பருங்களிறே வெனவயலார் பார்த்து நிற்பார்!

பட்டாடை போர்த்தவர்கள்; வீரர், மேலாம்
பளிங்குமணி மாடங்கள் தன்னில் வாழ்வோர்;
கட்டான கலைவாணர்; கலைஞர்; தந்த
காட்சிகளைச் சிறிதுகடந் தேகும் காலை,
கொட்டுகின்ற தேனுறங்கும் மலர்ப்பூம் பொய்கைக்
கோடெல்லாம்; சோலைகளும் இடையில் கண்டேன்!
எட்டுகின்ற தூரத்தே இன்னோர் பக்கம்
இருக்கிறதே யதுமருவூர்ப் பாக்கம் காணீர்!

விண்ணகத்தே பலமீன்கள் சூழ்ந்தி ருக்க
விளங்குமுழு மதிபோலும் புகாரின் நல்ல
மண்ணகத்தே பொய்கையிலே மலரா நிற்கும்
மரையரும்பி னிடைமலர்ந்த மரைப்பூக் கண்டு
பெண்ணகத்தே யெழுபிறப்பும் பெறுதற் கொண்ணுப்
பேரின்பம் பெறலுண்டே! ஆகா! என்றன்
கண்ணகத்தே ஓவியமாய்ப் பதிந்த தந்தக்
காட்சியினே டின்புடனே கடந்தேன் சோலை!

வார்த்தெடுத்த பொற்கலசம் போன்று தாய்மை
வடித்துவைத்த கொங்கையினைக் குழவி யொன்று
சேர்த்தணைத்துத் தழுவுவது போலும்; மெத்தச்
சிவந்தமுகில் மலைதழுவல் போலும், ஆங்கு
நீர்ப்பெருக்கக் காவிரியாள் கடலில் சேரும்
நிலையிந்தப் புகாரிலோர் இனிய காட்சி!
பார்த்திருக்கப் புரவிகளின் வரிசை போன்று
படகுகளோ, பெருவரிசை யாகக் காணும்!

(வேறு)

பட்டினை நெய்து விற்போர்;
        பவளவிலை சொல்வோர் கொள்வோர்!
மொட்டுடன் மலர்கள், மாலை,
        முழுமணத் திரவி யங்கள்
கொட்டியே விற்போர்! வண்ணம்
        குழைப்பவர்; இவரோ டாங்கு
மட்டிலா வாணி பங்கள்
        மருவூரங் காடிக் காட்சி!

பொன்னெடு மணியும்; வாசப்
        பொருள்களும்; முத்தும்; மின்போல்
மின்னிடும் வைரம்; ஏலம்;
        மிளகொடு பாக்கும்; தேக்கும்;
அன்னியர் கொண்டு வந்தே
        அளந்திடும் பொருள்கட் கீடாய்
நன்னய மாக மாற்றம்
        நடந்திடும் வீதி தோறும்!

(வேறு)

இவ்வண்ணம் இருபாக்கம், இடையே சோலை;
        எழில்கொஞ்சும் காவேரி கலக்கும் சாலை;
செவ்வண்ண யவனர்கள், சோனர், சீனர்;
        சிறந்தோர்கள்; தெளிந்தோர்கள் நிறைந்த வூரை
எவ்வண்ணம் புகழுவது? புகழ்வ தென்றால்
        எதைப்புகழ்வ தெதைவிடுவ தென்றே தோன்றும்!
அவ்வண்ண மேயழகு வண்ணம்! ஊரின்
        அமைப்புக்கோ ரிலக்கணமே புகாரென் போமே!

பெண்ணழகி மாதவிக்குப் பிரிவை யோர்நாள்
பெரும்பரிசாய்த் தந்ததுயர்ப் புகாரிப் பேரூர்!
பெண்ணவட்குத் துயர்தொடங்கப் பிறிதோர் பக்கம்
பெருமகிழ்ச்சி கண்ணகிக்குண் டாகி நீரைக்
கண்வழியே யுகுத்திடச்செய் துவகை கொண்ட
கவினூறும் நகருமிந்தப் புகாரே யாகும்!
பண்ணுடற் கலைபயின்ற 'அத்தி—மந்தி'
பழங்காதல் சங்கமமிங் கோர்நாள் காட்சி!

மாற்றார்க்குச் சிறைக்கோட்டம் திறந்த தோர்நாள்!
மணிச்சோழர் பரம்பரையிற் புதுமை யாக,
ஆற்றுத அரசனலக் கரிகால் சோழன்
அடைபடவும் சிறைக்கோட்டம் திறந்த தோர்நாள்!

தேறறிடவே முடியாவத துயரம ஓரநாள
தீர்ந்ததுவும்; கரிகாலன் சிறையின் மீண்டு
போற்றுகின்ற பெருவெற்றி கொள்ள, ஓர்நாள்
பூரித்த நகருமிந்தப் புகாரே யாகும்!

(வேறு)

இங்ஙனம் பலவாங் காட்சி
        என்முனம் தோன்றும் போழ்து
எங்ஙனம் உறக்கம் ஏகிற்
        றேன்விழிப் புற்றே னந்தோ!
எங்ஙனம் புகழ்வ தற்கும்
        ஏற்றதோர் புகாரின் மாட்சி
''இங்கினிப் பிறக்கு' மென்று
        எண்ணியே மகிழ்ச்சி கொண்டேன்!



# பகற் கனவாய்ப் போனதுவோ?

**[ கவிஞர் க. நெடுஞ்செழியன் ]**

[வாழ்த்து]

வேய்ங்குழல் மீட்டும் இன்னிசை அலையில்
        விறலியர் ஆடும் நாட்டியக் கலையில்
ஆய்ந்திடு புலவோர் அருட்கவி நடையில்
        அருள்நெறி அறவோர் ஆணைசால் படையில்
பாய்ந்திடு காவிரி கொள்ளிடப் புனலில்
        பாவையர் தூண்டும் இல்லறக் கனலில்
தோய்ந்திடு சோலைப் புன்னகை மலரில்
        தோய்ந்தனை தமிழே சுடரொளி வாழி!

தாயென அழைப்பேன், பின்னர்த்
        தந்தையென் றணைப்பேன், தெய்வம்
நீயென உரைப்பேன், நெஞ்சம்
        நினக்கெனச் சமைப்பேன், நாளும்
தூயன படைப்பேன், உன்றன்
        தொல்புகழ் திளைப்பேன், நின்றன்
சேயெனும் பதமே என்றன்
        சிந்தையில் இனிப்பதம்மா!

தாயின் வழிபாட்டில் தாழைப் புதர்தழுவிப்
பாயும் புனற்பொன்னிப் பண்ணிசையில் மெய்ம்மறந்து
சத்துள்ள மக்களினம் காணச் சமஉடைமை
இத்தரைக்குக் காட்டும் எழில்கண்டு நின்றிருந்தேன்.
அந்நேரம் ஓர்கிழவன் ஐம்பதுக்கும் மேலகவை
பொன்னிறத்து வெண்தாடி போர்த்துப் கருஞ்சால்வை
கையில் மதுக்கிண்ணம் கண்ணெல்லாம் விம்மிதமாய்ப்
பைய அருகணைந்து பகர்ந்தான் சிலமொழிகள்.
மெய்யெல்லாம் வாயாக விழியெல்லாம் நாவாக
கையெல்லாம் தன்கருத்தைக் காட்டுகின்ற சொல்லாக
ஏதேதோ செய்கையினால் எவ்வாறோ தன்கருத்தை

ஓதி முடித்தேயென் உதவியையுந் தான் கேட்க,
காவிரிப்பூம் பட்டினத்தைக் காணவந்த இப்பெரியோன்
மாவளவன் ஆணை மதிப்பிதழைப் பெற்றிருந்தான்
ஆதலால் பூம்புகார் அணிசால் தலைநகரில்
ஏதும் தடையின்றி எம்மருங்கும் காட்டிவந்தேன்.
கன்றினைப்போல் உள்ளம் களிகொள்ள யாமிருவர்
சென்றடைந்தோம் சென்னி சிறப்படைந்த வாயிலிலே!
ஆங்கேதான் . . . .

ஔவை இளவெயினி அன்புமகள் ஆதிமந்தி
கொவ்வைக் கனிக்காதல் கொஞ்சுகின்ற நக்கண்ணை
பொதியைத் தமிழ்பேணும் பூம்புகார்ச் சான்றோரும்
மதுரைப் புலவர்களும் மாவளத்தான் பொன்னவையில்
கார்பூத்த முல்லை கவின்பூத்த முத்தமிழின்
சீர்பூத்த சொல்லைச் செவிவாயால் உண்டிருந்தார்.
பட்டிமன்றம் பாமணக்கப் பாவரங்க மேடைமிசைக்
கொட்டி முழங்கக் கொடியாடும் முன்வாயில்,
சொன்னின்று பாடும் சுடர்ப்பாட்டுப் பாவலனை
முன்னின்று காணுதற்கே மொய்த்தவிழி மன்றமதில்
''பாடியதோர் வஞ்சிநெடும் பாட்டாற் பதினாறு
கோடிப்பொன் கொண்ட தமிழ்க் கொற்ற விழாக்கண்டு
யவனத்துச் சான்றோன் அடைந்த வியப்பை
உவமிக்க ஒண்ணாதே! ஊர்வளத்தைக் கண்டோமே!

சங்கவிழும் மடையெல்லாம் மருதங் காட்டும்,
சடையவிழும் தாழையெலாம் நெய்தல் காட்டும்,
கொங்கவிழும் கொடிமாடம் குறிஞ்சி காட்டும்,
குளிரவிழும் சோலையெலாம் முல்லை காட்டும்
அங்கவிழும் அவலத்தே அன்றிற் பேடை,
அனலவிழும் துயர்ப்பண்ணே பாலை காட்டும்,
பொங்கவிழும் உலைமூடிப் பானைச் சோறு
பொலிவவிழும் பூம்புகார் வளமே காட்டும்.

தெள்ளிய பொய்கை உள்ளே
தேனிலா உருவஞ் செய்ய
வெள்ளிய அன்னச் சேவல்
வேற்றுமை தெரியா தாகி
உள்ளிய பெடையென் றுன்னி
உழையுற, மரையின் பெண்ணாள்
கள்ளூறு முறுவல் கண்டே
கண்களைச் சிமிட்டும் நீலம்.

விண்ணினை ஒட்டும் மாடம்; திங்கள்
வெண்கறை ஒட்டும் கொடிகள்; பார்ப்போர்
கண்ணினை முட்டும் கூடம்; நெஞ்சக்
கலையினை மூட்டும் வீதி; அன்னை

மண்ணினைக் கட்டும் மக்கள்; நாளும்
மனையறங் காட்டும் இல்லம்; எண்ணும்
எண்ணினைச் சுட்டும் வண்ணம்; இன்பம்
எழிலுறச் சூட்டும் நகரந் தானே!

கடல்கலக்கவோ மலையிடிக்கவோ
காடழிக்கவோ நாடமைக்கவோ
தடையெரிக்கவோ முடியழிக்கவோ
உடையிறுக்கியே படைதுடித்ததே!

கனல்தெறித்தன விழிவேழமே
கடுகடுத்தன பரிமாக்களே
மணியொலித்தன அணிதேர்களே
மடையுடைத்தது புதுவெள்ளமே!

கள்ளர்தமைப் பிணிக்கின்ற வெள்ளில் மன்றம்
கடுகிவரு நோய்தீர்க்கும் இலஞ்சி மன்றம்
உள்ளமதில் நடுநீங்கி நீதி சொன்னல்,
உயிர்துடித்து நீருகுக்கும் பாவை மன்றம்

சொல்லடங்காத் துயருற்று நஞ்சால் நொந்தோர்
சோர்வகற்றி வாழ்வளிக்கும் நெடுங்கல் மன்றம்
பொல்லாமை செய்வோரின் உயிரைக் கவ்விப்
பொதுமைநெறி காக்கின்ற பூதங் கண்டோம்

தீதறியாச் சான்ேறேனும், தீதொறுத்து நலங்கூட்டும்
பூதங்கள் கண்டே புலன்நடுக்கம் கொண்டானே!

. . . . . . . .

சிவனுக்கும் மாலுக்கும் கோட்டம், அங்குச்
செவ்வேட்கும் கருவேட்குங் கோட்டம்; இந்தப்
புவிபோற்றும் புத்தனுக்கும் கோட்டம், அங்குப்
புறம்பணையான் கோட்டம்நல் ஊரின் கோட்டம்

அவியுணவின் நாகருக்குங் கோட்டம், இன்னும்
அணியேரான் வாலியோன் கதிரோன் கோட்டம்
கவிபொழியும் நிலவுக்கும் கோட்டம், அந்தக்
கலையாற்றின் தேக்கமெலாம் அழகின் கோட்டம்!

அவன் . . . .
வழிகின்ற கண்ணீரே வாழ்த்தெழுதும் மையாக்கி
எழுகின்ற காதலினல் ஏத்தினன் அம்முதியோன்

சிங்கள நாட்டு உணவுதனை — அந்தச்
சீனத்து வாணிகர் சுவைத்திடவும்
கங்கையின் கோலக் கலைமணியை — இன்பக்
காவிரிப் பெண்ணாள் அணிந்திடவும்

சிங்கம ர்ராட்டர் கலையறிவை — இங்குச்
சேர்ந்திடு ரோமர் பருகிடவும்
பொங்கும் யவனம் தமிழாக — அன்பில்
பூத்த ஒருமை பொலிந்ததுவே

அம்முதியோன் . . . .
ஒன்றாய்க் கலையுலகம் உருவாக்கும் வீதியினில்
நின்றான் நினைந்தான் நீள்தமிழின் மாண்பதனை! . . .

கூனிய நெஞ்சினைக் கொண்டே — பெருங்
குன்றெனச் செல்வம் சேர்த்திட எண்ணி
வாணிகம் செய்தனர் அல்லர் — ஒரு
வடுமொழி நாணி அறத்தினை ஓம்பிப்

பேணிய கொள்கையர் ஒன்றாய் — நாளும்
பேணிட வாழ்ந்தது செம்பியன் கொள்கை
தோணியும் வாளுமே கோணல்— பண்பு
தோயுமங் காடியோ மன்னனின் செங்கோல்

'உள்ளங்கள் உவக்க வையத்
துலகங்கள் செழிக்க 'ஏழைப்
பள்ளங்கள் செல்வ மேட்டுப்
பகுதியை நிறைக்க என்பால்

கொள்ளுங்கள் பாடம்' என்றே
கூறிடு புதுநீர்ப் பொன்னி
உள்ளங்கள் துள்ளும் வண்ணம்
ஓடினாள் பாடி னாளே!

இருபதின் எட்டு நாட்கள்
இந்திர விழாவைக் காணத்
திரண்டனர் உலகோர்! ஆங்கே
திகழ்ந்தன ஆடல் பாடல்!

மருண்டது கண்டோர் நெஞ்சம்!
மயங்கின கலையின் தேக்கம்;
உருண்டது சமய வாதம்
ஒளிர்ந்தது தமிழின் காதல்!

கண்டதும் . . . .

அடுத்தஅடி பேர்த்தெடுக்க அவன்மறந்தான் அங்கு
நடிக்கின்ற கூத்தோடு நாட்டியத்தைக் கண்டதனால்!

பன்னாட்டு நாவாய்கள் பாய்மரத்துக் கப்பலிலே
பொன்னிறங்கும் ஆங்கே புதுக்கள் கலமிறங்கும்
பாயும் கலிமாவும் பச்சைக்கற் பூரமுமாய்த்
தோயும் தமிழ்மண்ணைச் சூழ்ந்து
நீலக் கருஞ்சாயம் நேர்த்தியொடு தோய்த்தெடுத்தே
கோலக் கருவிழியார் கொண்டாடு மேல்துணியும்
கண்ணொற்றிக் கொள்ளும் கலிங்கம் அறுவையொடும்
மின்னொற்றி வந்ததென வெண்பட்டின் துகிலினமும்
கொற்கைத் துறைமுத்துக் கோடிபெறும் வெண்மருப்பு
விற்கத் தகுந்த விளைந்தமுதிர்த் தேக்குமரம்
மிளகுப் பொதிமூடை, மிக்குயர்ந்த ஏலம்
இலவங்கப் பட்டை, எதிலும் பொதிபொதியாய்ச்
சுங்கம் விதிப்போர்கள் சூழ்புலியின் சின்னமதை
அங்குப் பொறித்தேதான் ஆர்க்கின்ற காட்சியெலாம்
ஒன்றொன்றாய்க் காட்ட உவந்துவரும் வேளையிலே
என்னென்று சொல்லுவேன் ஏதோவோர் பெருங்காற்று
பொத்தென்று தள்ளிவிட போய்விழுந்தேன் எங்கோநான்
சித்தம் தெளிந்து திசைமுகத்தைப் பார்க்கையிலே
'மூட்டை'யதும் தான்கடிக்க மூண்ட துயில்நீங்கிய
ஓட்டைப் பழம்பாயின் உட்புறத்தே யான்கிடந்தேன்
பகலைப்போல் ஒளிர்ந்த பண்டைப்புகழ் வாழ்க்கை
பகற்கனவாய்ப் போனதுவோ! பாரீரே சொல்லிடுவீர்






[ கவிஞர் இ. அம்பிகை பாகன் ]

காவிரி யாற்றுக் கழிமுக மேயகக் கண்களுக் கெட்டியது
பூவிரி நாட்டியப் பூம்புகா ரேபுதுப் புன்னகை கொட்டியது
பாவிரித் தோடிய பைந்தமி ழால்நெஞ்சிற் பல்லவி முட்டியது
தாவரந் தாவரந் தண்டமிழ்த் தாயெனத் தண்ணிசை
கொட்டியது.

கொட்டிய நல்லிசை மெட்டினி லேயொரு கோன்முறை
எட்டியது
எட்டிய பார்வையில் எங்கணு மேபுகார் இன்கனி சொட்டியது
சொட்டிய தேன்கவி மாரியி லேபொன்னி தோள்களில்
தட்டியது
தட்டிய தன்மையில் நான்மலர்ந் தேன்மனம் தாயகம் ஒட்டியது.

மாடிகள் உயர்ந்து வானை மருவிய மருவூர்ப் பாக்கம்
தேடிய செல்வம் எல்லாம் திரைகடல் ஓடி வீரஞ்
சூடிய மகுடம் என்னச் சுடர்விடு மனைகள் காண
ஓடிய முகில்கள் நின்றே ஒருமுறை பொழிந்த காலம்.

கதிர்மணி கழுத்தி லாடக் கணிகையர் பரத மாட
மதுமலர்க் குழலி தூங்கி மனைகளில் அமைதி தூங்க
வதுவைசெய் குயில்கள் தூண்டி வருடிய உணர்விற் பூத்த
சதுர்விழி மாதர் நெஞ்சில் தனியுணர் வுயிர்த்த காலம்.

பார்புகழ் திரவி யங்கள் பாய்விரித் தோடிச் சொந்த
ஊர்களிற் சேர்க்க மொய்த்தாங் குலகரங் கான தாலே
சீர்பொலி மணிக ளார்ப்பச் சிலம்பொலி கலந்தங் கார்ப்ப
நேர்வழி வணிக மோங்கி நிறைநிதி குவிந்த காலம்.

பண்டமாற் றரசு செய்து பவளமும் மணியும் முத்தும்
மண்டிய சந்த னந்தேன் மகிழகில் ஆர வண்ணம்
கொண்டவர் கண்ட வின்பங் குலவிய பெருமை கூறத்
தண்டமிழ்க் கிளவி ஒன்றே தரணியில் அறிந்த காலம்.

நரையிலர் மக்கள் நாட்டில் நடப்பவை அறனாய் என்றும்
பரதமும் பண்ணுந் தேர்ந்த பனிமலர்க் கொடிகள் ஆட்டம்
சொரிவன பூக்கள் மாரி துயில்வன பிணிகள் பஞ்சம்
விரைவது பொன்னி இன்பம் விளைநிலம் மலர்தல் வேண்டி

பட்டினப் பாக்க மெங்குங் படர்ந்தடர் வீதி யோரஞ்
சொட்டிய கோல நீதிச் சோழனின் மரபு சொல்லும்
இட்டுணல் இல்லை நாட்டில் இரப்பவர் இன்றி ஓங்கித்
தட்டிய அடிகள் எல்லாம் தமிழ்க்கலைத் தொழில்க ளாலே.

ஆயநற் கலைகள் ஓங்கி அரண்மனை அறனி லோங்கிக்
கோயில்கள் விகாரை பள்ளி கொள்கையின் தெளிவு காட்டத்
தாயகத் தனைய முந்துந் தமிழ்விரி யாறும் ஊரிற்
பாய்கையில் தயங்கி மெல்லப் பலகலை பயின்ற காலம்.

பாவைகைக் காந்தள் ஆடப் பருத்தியும் பட்டும் பூத்துப்
பூவிரிந் தாடும் பொய்கை புனல்மலர்ந் தாடும் சொந்தத்
தேவையீ டாடும் நாளுந் தெளிந்தநல் லறிவு பாடும்
ஓவியஞ் சிற்பம் எல்லாம் உயிர்பெறும் உணவில் ஆடும்.

நீதிநூல் இல்லை வாழ்வில் நெறிமுறை வளர்வ தாலே
வேதியர்க் கில்லை வேலை வீடெலாங் கோயி லாகிச்
சோதிடர்க் கில்லை வேலை துயருறு நாட்டில் நூறாய்ச்
சாதிகள் சொல்வர் நுட்பத் தனிக்கலை விரிவ தாலே.

ஆலைகள் இல்லை இல்லம் அனைத்துமே ஆலை யாகிச்
சோலைகள் இல்லை வீடே சொரிமலர்ப் பொழில் களாகி
வேலைகள் இல்லை வாழ்வோர் வினைஞராய் விளங்கி மேலே
நீலவான் நின்று காணல் நிலமல நிறைந்த செல்வம்.

காரணம் என்ன நாளங் காடியிற் புதுமை என்ன
தோரணம் கரும்பு வாழை சுடர்விரி கமுகு மாலை
பூரண கும்பம் எங்கும் புன்னகை பூத்த கோலம்
வாரணம் பரிகள் மேள வாத்தியம் சேனை மக்கள்

அந்தரத் தெழுந்தாங் கீர்ப்பை அறுத்தெறிந் தழகு சொட்டுஞ்
சந்திரன் கொய்ய முந்திச் சன்னதங் கொண்டோர் சூடச்
செந்தமிழ்ச் சோழன் நாட்டிற் சேர்ந்ததேன் செய்தி என்னே
இந்திர விழாவுக் காவிங் கித்தனை அழகுக் கோலம்!

ஆய்ந்தறிந் தவிந்த சான்றோர் அருந்தமிழ்த் துறைகள் ஆடித்
தோய்ந்தெழுந் தமுது சிந்துந் திருவிழா தமிழுக் கென்று
பாய்ந்ததோர் வாக்கு நெஞ்சம் பாலமொன் றமைக்குந் தன்மை
வாய்ந்ததிவ் வரங்கே யென்று விரைந்ததவ் வரங்கை நாடி.

சந்தன வாடை வீசச் சதுர்பயின் றதனில் ஆடி
வந்தன பலவாய் வீணை வேய்ங்குழல் யாழின் கானம்
உந்தியென் உள்ள மாங்கே ஒருவிழி செலுத்த முந்தச்
சந்திர வதன மெல்லாந் தரையினில் நின்ற தென்னே!

துடிப்பிலே எழுந்த நாதஞ் சுருதியோ டொன்ற வெட்டி
அடித்ததோர் மின்னற் கீற்றுங் கரங்கிலோர் அழகுப் பாவை
பிடித்தனள் பற்றிக் காந்தப் பித்தொளிர் கண்ணால் ஈர்த்து
விடுத்தனள் அன்புப் பாணம் வியந்தனர் அவையோர் சொக்கி.

வளநிறை மனதின் செல்வ வருகநீ வருக வின்று
வழிபிரிந் தழியு நுட்ப வகையுரை பதங்க ளெல்லாம்
மொழிவழி யொன்றப் பால மிடுதலே முதன்மைத் தேவை
விழிதர வந்தாய் முந்தி விரைதிநின் பணியில் என்றாள்.

சீர் தமிழ் நுண்கலைச் சொற்களில் ஒன்றிய சிந்தை நிறைந்தம்மா!
ஊர்பல வாயினும் ஒண்டமிழ் ஒன்றென உள்ளம் மலர்ந்ததம்மா!
கூர்மதியோர் எந்தம் கொள்கை நயத்திடக் குன்றாய் உயர் கையிலே
கார்பொழி பூநகர் கண்ட விழாப் பயன் கண்ணைக் கொடுத்ததம்மா.

ஈழமணித்திரு நாட்டின் கருத்திது வென்று முழங்குகையில்
தோழரெனத் தமிழ் வீரரெலாமெனைத் தூக்கி மகிழ்ந்து நின்றார்
ஆளுந்தமிழ்க் கலைப் பாலமமைத்துநாம் அண்டி அணைவமென
ஆழநெடுந்திரை ஆழி கடந்தவர் அன்பில் மிதந்து நின்றார்

சித்தஞ் சுழன்றது மத்தெனவே யதில் முத்துத் திரண்டெழவே
சொத்து மலர்ந்தது கொத்தெனவே மது கொட்டி ஒளிர்ந்ததுவே
புத்தம் புதுக்கலைச் சொற்களெலாம் பொதுச் சொத்தாய் உருள் கையிலே
முத்து மிளிர்ந்தது நெஞ்சினிலே முது சொத்து நிறைந்ததுவே.

துள்ளி யெழுந்துநான் பார்க்கையிலே அட தூக்கங் கலைந்து விட்டேன்
தெள்ளு தமிழ்க்கவி பாடத் தொடங்கிய செய்தி மறந்துவிட்டேன்
உள்ளமெலாம் ஒரே ஊற்றுச் சுரந்திட உண்மை பகர்ந்து விட்டேன்.
எள்ளி நகைப்பினும் எங்கள் புகாரிலோர் நாளைக் கழித்து விட்டேன்.

# நன்கு வடித்திடு கண்ணீர்

[ கவிஞர் தென்மொழி ]

கண்ணாடிக் கருங்கடலில் முகத்தைப் பாரககும
        கரைநெய்தல் துறையரசி; காவி ரித்தாய்
பண்ணார்ந்து வளர்செல்வி; புலவர் பாடல்
        பதிக்கின்ற மணிப்பேழை; மரக தக்கா
அண் ணாந்த நிழல்மூதூர்; வளங்கு லாவி
        அரசிருக்கு மெழில்நகரம் புகாரில் ஓர்நாள்
விண்ணோங்கு வாயில்வழி நுழைந்தேன். நெஞ்சில்
        விளைகின்ற கனவெல்லாம் விழிசு மந்தே

கருநாவற் கனிவண்டு பாண்மி ழற்றிக்
        காந்தமலர்ப் பிரியாத காட்சி யெங்கும்
பெருவிருந்து புலனேற்றும் வனங்கள் ஐந்தும்
        பிஞ்சுவெயில் வேனிலொடு தென்றல் கூடி
அருகழைக்கும் நீராழி மண்ட பத்தின்
        அற்புதமும் கற்பகம்வேல் சிவன்மால் புத்தன்
பரிதிநிலா இந்திரனோ டருகன் சாத்தன்
        பலதேவன் கோயிலெல்லாம் பார்த்துள் சென்றேன்.

பட்டினப்பாக் கம்வந்தேன். மேகப் பந்தர்
    பளிங்குமணி மாடத்தே சிலைநி கர்த்த
கட்டிவெல்லக் கன்னத்தார் குழல சைத்தே
        கமலாப்ப ழச்சுளையின் இதழ்ம டித்து
வட்டநிலா மின்னலொடு வந்த தென்ன
        வரிப்பந்து விளையாடக் கண்டேன். மான்கண்
சுட்டுபல கணிக்குள்ளே கூத்தும் பாட்டும்
        சுருதியரங் கிசைபயில்வார் தோற்றம் கண்டேன்.

அரசரொடு வேளாளர் வணிகர் வேத
        அந்தணர்வாழ் இடமெல்லாம் நறும ணத்தை
விரவிவரு சந்தனக்குங் குமக்கு ழம்பு
        வீதியெலாம் சேருக்கும். கொடித்தேர் வீதி

புரவியொடு மதயானை மறவர் வீதி
புகழ்கூத்தர் மருத்துவர்சோ திடர்,க ணக்கர்
நிரல்வீதி மாகதர்,சூ தர்,தெ ருக்கள்
நித்தியகன் னியர்வீதி கடந்து சென்றேன்.

வெயில்நுழையாக் குளிர்சோலை நாளங் காடி
விளங்கிடுபூ தத்தினுக்கு மலர்கள் தூவிப்
பயில் குரவை முழக்கோடு விழாவெ டுத்துப்
பலி கொடுப்பார் தமைக்கண்டேன். கரிகாற் சோழன்
எயில்வளைத்த வடநாட்டு வெற்றிக் காக
எழு சின்னத் தோரணமார் வாயில், பொற்பு
குயின்றபட்டி மண்டமும் முத்துப் பந்தர்
கொலுவிருக்கு மண்டபமும் கண்டு சென்றேன்.

கவனத்தை இழுக்கின்ற கவினும் பண்டைக்
கற்பனைகள் சித்தரித்த வழக்கும் தாங்கி
நிவந்தொளிரும் ஐவகைமன் றங்கள் கண்டேன்!
நீடுமரு வூர்ப்பாக்கம் வந்தேன். நீர்சூழ்
புவனத்து மொழியெல்லாம் தமிழை வாழ்த்தப்
புகுந்தவெனப் பலநாட்டு வணிக ரோடு
யவனத்து வாணிகர்வாழ் வேயா மாடம்
யாவுமொரு பால்வெள்ளிக் குன்றாய்க் கண்டேன்.

பட்டாலும் மயிராலும் பருத்தி யாலும்
பாய்ந்தவிழை யறியாது பாம்புத் தோல்போல்
கூட்டமிட்ட பூவேலை யொளிர நெய்து
காட்சிமிகக் குவித்திட்ட துணியோர் பாலும்
கொட்டிவைத்த நவமணிகள் பொன்வ கைகள்
கொடியடையா ளத்தோடு மிளிர்வ வோர்பால்
தட்டாத கூலவகை நிறைவ வோர்பால்
தாங்கருங்கூட் டத்தினரை எண்ணப் போமா?

இடத்துக்கும் பொழுதுக்கும் பண்ண ளந்தே
ஏழிசையில் இசைக்கின்ற குழல்யாழ்ப் பாணர்
நடத்தோடு செவிக்கின்பம் தருவார் ஓர்பால்
நறுமணப்பூ சாந்தோடு, வண்ணம் சுண்ணம்
மடக்கொடியார் விற்றிருப்பார் ஓர்பால் கொல்லர்
மரத்தச்சர் தட்டார்,கன் னாரும் தங்கள்
திடத்தொழிலைக் காட்டிநிற்பார் ஓர்பால், கண்டே
திரையழைக்கும் கடற்கானல் சென்றேன் மாலை.

கார்த்திகையின் விளக்கன்ன கமல மொட்டுக்
கவினார்ந்த சூரியகுண்டம் சோம குண்டம்
கூர்த்தமுள்ளார் பூந்தாழை பொன்ன ளக்கக்
குவிபுன்னை முத்தளக்கும் நெய்தற் கானல்

சீர்த்த மணல் எக்கரிடைப் பலாசசு ளைபோல
        திகழ்மேனி மடநல்லார் வெள்ள ரிக்குள்
போர்த்தவிதைத் குடர்நிகர்மின் னாரம் பூண்டே
        புலிநிகர்த்த துணைவரொடு பொலிந்தி ருப்பார்.

அலைசுருட்டும் கடலுடனே உடல்சு ருட்டி
    அணைபொன்னி புணர்துறையில் பாய்சு ருட்டி
நிலைகொள்ளும் நாவாய்கள் மயில்மு கம்போல்
        நீள்குதிரை அரிமுகம்போல் நிறைந்தி ருப்ப
உலைநெருப்புக் கொழுந்துசுடர் போல்மேல் நோக்கும்
        உயர்கலங்க ரைவிளக்கம் அருகே, வாங்கும்
விலைபதித்த புலிச்சின்னப் பண்ட மெல்லாம்
        விரிந்திருப்பச் சுங்கமிட்டு விழிக வர்ந்தே

தென்கடலின் பருமுத்தும் சேர நாட்டுத்
        தேக்கோடு கருமிளகு பனிப டர்ந்த
தொன்மலையின் பொன்மணியும் யவனர்த் தேறல்
        சோனகரின் நிமிர்புரவி, பூவி ரிக்கும்
பொன்னிதரு வளத்தோடு கங்கை நல்கும்
        புதுவருவாய் கீழ்க்கடலின் பவளம் சீனர்
பன்னுபொருள் சாவகம்,க டாரம், ஈழம்
        பயில்பொருளெல் லாம்கண்டே மலைத்து நின்றேன்.

துண்ணெனவே கண்விழித்தேன்! அந்தோ! கண்டு
        சொன்னதெல்லாம் பொய்க்கனவே, பாழே! கற்புக்
கண்ணகியாள் சிலையன்றி எதுவும் காணேன்!
        கண்டருகே சிரித்துநின்று செய்தி கேட்ட
நண்பனவன் மேல்நோக்கிச் சிலையைப் பார்த்து
        நன்குவடித் திடுகண்ணீர் என்றான். நானும்
''உண்மையினைக் கூறென்றேன்'. 'சிலம்பை நன்றாய்
        ஓதியதால் வந்தவினை' என்றான். சென்றோம்!!




**[ கவிஞர் இ. நாகராசன் ]**

முன்னைய மொழிகட் கெல்லாம் மூத்துப்பேர் முதிச்சியுற்றுப்
பின்னைய மொழிகட் கெல்லாம் பிறப்பிடம் அருளிப் பேணி
இன்னிலத் திளமை குன்றா எழிலுடன் இலங்கு மென்றன்
அன்னையே தமிழே அன்பாய் அகத்திருந் தருள்க நன்றே!

பண்டுலகில் பண்பினிலே பழுத்துப் பாங்கிற்
பக்குவத்தில் மூத்ததமிழ் முந்தை யோரைக்
கண்டுவரக் காதலுற்றேன் கால ஆற்றைக்
கடக்கவழி காட்டவல்லார் எவரு மில்லை
வண்டியதன் சகடமென நாட்க ளோடி
மாறிப்பின் மாதமென வளர்ந்தும் உள்ளம்
கொண்டபெரும் ஆவலது குன்றா தென்றும்
குறியதனை அறியுநெறி தேட லானேன்.

தேடிப்பல் லாண்டாகத் தெளிவே யின்றிச்
சித்தமது சோர்வுற்றே இருந்த காலை
பிடமைந்த சிலம்பென்ற ஏட்டைக் கண்டேன்
பெற்றிமையும் நற்றிறனும் பொருந்தச் சோழ
நாடதினில் காவிரிப்பூம் பட்டி னத்தே
நல்லியலார் நம்தமிழர் வாழும் செய்தி
வீடதனை நாடதனை மறக்கச் செய்ய
விண்முகிலைத் துணைகொண்டு விரைய லானேன்.

படர்ந்துவிரி பாரகத்தே பரமன் பாதம்
பற்றவுளம் உற்றதனால் பத்தி யோடு
திடமொன்று சித்தனென உயர்ந்து கொண்டல்
திரைசூடி எழில்காட்டும் சிறப்புப் பெற்ற
குடமலையைக் கண்டதனின் சென்னி மீது
குந்தியுள வேளையிலே தமிழ்ப்பாப் பாடி
நடமாடி ஒருநதிப்பெண் ஒயிலாய்ப் பாய்ந்து
நடக்கின்றாள் அவளுடனே தொடர லானேன்

காவிரியாம் அவள்பெயரும் அவள்கால் பற்றிக்
காடுமலை கழனியுடன் கவினுர் ஏரி
பூவிரிந்த காவுமுயர் புன்னை தென்னை
பொலிதோப்புப் பல கண்டு புதுமை பூக்கத்
தாவியவள் செல்லுகிற திசையைச் சார்ந்து
தயங்காது நடக்கின்றேன் அந்தப் பெண்ணும்
ஆவியுடன் ஆகமதை உவந்தே ஈந்தாங்
காழியெனும் தேவனுடன் ஒன்று பட்டாள்.

காவிரியும் கடலுமொன்று கரையில் நெஞ்சைக்
கவர்ந்துகவின் காட்டுவதாய்க் கலைகள் மேவி
பூவினிலே பொலியும்பூம் புகாரை, மேன்மை
பூத்தொளிரும் சீரமைந்த தமிழர் தம்மை,
நாவினிக்க நெஞ்சினிக்கச் சங்கங் காத்த
நாடகமும் இயலிசையும் சிறப்புற் ஞேங்கப்
பாவினிக்க இளங்கோவன் செய்த பெற்றிப்
பாங்கமைய வாழுகிற சிறப்புக் கண்டேன்.

கங்குற் கனகன் கருங்கல்லாய்க் கனத்துக் கறுத்துக் காசினியில்
எங்கும் மறைக்கத் தேய்ந்துள்ள இந்தப் பிறையும் வானகத்தே
தொங்கும் மீனும் துலக்காது தோல்வி காணச் செங்கதிரோன்
சிங்கக் குருளை எனச்சிலிர்த்தான் திசைகள் யாவும் தெளிந்
தனவே.
அத்தன் புகழை அலைபாட அமைப்பார் வெண்மைச்
சங்கினங்கள்
முத்துச் சிந்தி முறுவலிக்க முருகார் வங்கம் பலகடலில்
தத்தித் தவழ்ந்து தமிழ்நாட்டின் தகைமை காணும் காதலினல்
பித்துப் பிடித்து வரும்பெற்றி பிறங்கும் பெருமை நிலைகண்
டேன்.
சீனப் பட்டும் சாவகத்தின் சீரும் ஈழ நாட்டினிலே
ஆன உணவுத் தானியங்கள் அரபு வாசி யுடன்கரையில்
ஊனம் இல்லா உரோமுடன்சீர் உயர்ந்த கிரேக்க கடாரத்தார்
ஞானம் பயில நம்மவர்க்கு நயந்தீ பண்டம் குவிந்திருக்கும்.

பூவார் பொழிலில் புள்ளினங்கள் புதுமை கொண்டே பொலி
தமிழில்
பாவைப் பாடிப் பறக்கவுயர் பரமன் பாதம் பணிபவரின்
தேவா ரத்தின் தெளிவொலியும் சீலத் தெய்வ நெறிகாட்டும்
கோவில் மணியும் கூடியருள் கொள்ளும் குரலாய்
நிதமொலிக்கும்.

ஏரால் நிலத்தை உழுதுவிதை எங்கும் தூவக் காவேரி
நீரைக் கொடுத்து நிதம்பேண நெல்லு மணியும் நிறைவுற்றுப்
பாரின் பசியைப் போக்கிடவே பாங்கார் இன்பம் பரிமளித்துச்
சீரும் திருவும் சிறக்கவைக்கும் திறனுர் தமிழர் நிலைகண்டேன்.

விரிந்த பண்பு மனத்தாலே வேடன் புறவிற் காயுடலே
அரிந்து கொடுத்த அருட்சிபியும் ஆன்ருேர் அறத்துக் கமைந்து கன்றைப்
பிரிந்த ஆவின் துயர்கண்டு பிள்ளை மார்பில் தேருர்ந்து
திரியாச் செங்கோல் நெறிமனுவும் சிறந்து வாழ்ந்த திருநகரம்.

முன்ஞேர் மரபின் முருகமைய முறைமை பேணும் மன்னவனின்
வன்ன மாடி மதிலகழி மறையோர் மனைகள் வணிகர்களின்
பொன்ஞர் கூடம் பூவதனைப் புரக்கும் ஏரார் காராளர்
துன்னிட வதியும் இருக்கைகளும் துலங்கும் தூய நகர்கண்டேன்.

புத்தம் சமணம் சைவமுடன் புனித தெய்வ நெறியதனை
நித்தம் காக்கும் விகாரைகளும் நேரார் சமணப் பள்ளிகளும்
அத்தன் கோவில் உடனமைந்தே ஆன்ம உயர்வில் சிறந்தமக்கள்
சித்தம் போல நிறைவுற்றுச் சீராய் இலங்கும் அவ்வூரில்

பொய்யர் இல்லை புனைசுருட்டுப் புகலும் புல்லர் இலை யெங்கும்
செய்ய சீலம் பேணுமருட் செல்வர் சிறந்த சீராளர்
பொய்யா மொழியால் வள்ளுவஞர் பூவிற் கீந்த திருக்குறளின்
மெய்யின் வழியே மேவிநிற்போர் விளங்கும் மேன்மை கொள் நகரம்.

நெய்தல் மருதம் முருகுமுல்லை நிமிர்ந்த குறிஞ்சி நிலத்தோர்கள்
செய்ய மரபின் சீர்மையினைத் தினமும் பேணி ஓம்புவதால்
பொய்தீர் வாழ்வு பொலிவுற்றுப் பூரிப் புடனே பலவழியில்
உய்தார் அந்த ஊரிலுள்ள உண்மைத் தமிழர் எனவுணர்ந்தேன்.

கற்புச் செல்வி கண்ணகியை, கலையார் செல்வி மாதவியை,
பொற்புப் பொருள்சொல் புலவோரைப் பொன்ரு நீதி புகல் வோரைச்
சிற்பத் திறனைச் செய்வினையின் சீரை வேற்று நாட்டினைச்சேர்
விற்பத் துவத்தில் மிளிர்பவரை மேவிப் பொலியும் அந்நகரம்.

ஊரில் விளையும் தானியங்கள் உப்போ டிறைச்சி மீன்வகைகள்
ஏரார் இஞ்சி இலவங்கம் ஏலங் களாதி கிராம்பிவற்றை
சீராய் விலையைச் செப்பியதில் சிறிதே இலாபம் சேர்த்து நெறி
நேர்கொள் நாளங் காடியிலே நித்தம் விற்கும் ஒலிகேட்டேன்.

பட்டினப் பாக்க முடன்மருவூர்ப் பாக்கம் சுற்றிப் பார் வையிடக்
கட்டில் லாத காலமது கழியக் கதிரோன் மேல்வானத்
தொட்டில் மீது துயில்ப்யிலத் தொடங்கச் சுற்றி வளையிருளை
வெட்டி வீழ்த்தி வீதியெங்கும் விளங்கிற் றுயர்ந்த விளக்கினங்கள்.

பரதே சத்துப் பட்டுடன்நல் பாங்கார் மணிகள் யாவுமுயர்
நிரையாய் வைத்து நெஞ்சத்தின் நேர்மை நிலைக்கும்
வகையினில்மெய்
உரைசெய் தல்லங் காடியிலே விற்போ ரோதை கடற்கரையில்
இரையும் அலையை அடக்கியங்கே எழுந்தே இரவைப்
பகலாக்கும்.

இரவின் கரிய திரையகல எங்கும் பொன்னார் சுடர தனைப்
பரவிப் பாங்காய் பரிதியுமே பாரைப் புரக்கக் கீழ்வானில்
வரவே கோழி கூவிடப்பேர் வாவல் கூகை மறைவிடத்தை
மருவ மக்கள் உயிரினங்கள் மகிழும் இன்பம் தொடருமங்கே.

நிறைவுற்ற நெஞ்சத்தால் பூரிப் புற்று
நேரார்ந்த காவேரி வழியோ டேகி
பொறையுள்ள குடமலையில் பொருந்தி நின்றேன்
பூவலஞ்செய் கொண்டலெனைக் கண்டு தூக்கி

கரையுற்றுக் குறையுற்றுக் கவினார் பண்டைக்
காலத்தின் புகழுக்கே இழுக்குண் டாக்கி
சிறையுற்ற வாழ்வினையே மீண்டும் கொள்ளச்
சிலம்புக்கு முன்னென்னை நிறுத்திற் றாமே . . .

கற்பனையா? நான்கண்ட காட்சி யாவும்
காலத்தின் விஞ்ஞானப் புதுமை யாமோ?
பொற்புறுநல் தமிழர்களின் வாழ்வே பாரில்
பொலிவுற்ற தென்றுமேல் நாட்டார் இன்று

அற்புதமாய் ஆராய்ந்தே அறைந்தார், ஆனால்
அந்தவுண்மை அறியாதிங் கழிந்தோம் மீண்டும்
நற்புலவோர் காட்டுபூம் புகாரைக் கண்டு
நாம்தமிழர் என்றுளத்தில் கொண்டு வாழ்வோம்!!

# தொல்பதியைத் தேடுகின்றேன்

[புலவர் கி. வேங்கடசாமி]

வானம் சினந்ததோ?
        வையம் நடுங்கிற்றோ?
மோனப் பெருங்கிழக்கே
        மூண்ட கனலெதுவோ?

ஊழிப் புலியின்
        உறக்கம் கலைந்ததுவோ?
ஆழக் கடலின்
        அமைதி குலைந்ததுவோ?

ஏழு கடலும்
        எழுந்துதிசை தூர்த்தனவே!
ஊளையிடும் காற்றில்
        ஒருதனிப்புள் தேம்பியதே!

தேம்பும் மனப்புள்ளின்
        தீங்கவிதை கேளீரோ?
பூம்புகார் வெள்ளத்தில்
        போனகதை கேளீரோ?

பண்ணப் பணைத்த
        பழம்பெரிய சோணாட்டில்
பொன்னைக் கொழிக்கப்
        புனல்கொழிக்கும் காவிரியாம்

அன்னை கடலை
        அணைக்கும் கரையோரம்
பெண்ணின் பெருமையினைப்
        பேசும் துறையோரம்

பண்டொருநாள்,
மானெடுங்கண் மாதவியை,
மாசாத்து வான்மகனை,
கானல் வரியில்
கலங்கவைத்த பட்டினத்தை,

நெஞ்சே,

நாமொருநாள் காண்போம்
நடந்த கதைகேட்போம்
தேமொழியின் யாழைத்
திரும்பவும் பேசவைப்போம்

கானல் வரிப்பாட்டில்
காட்சி தடுமாறி
மானெடுங்கண் மாதவியை
மாயத்தாள் என்றெண்ணி
ஊழாம் வினைதான்
ஒருதனி யாழாய்த்தன்

வாழ்வினையே ஈருமொரு
வாளான தோவென்று
தான்செய்த தீவினை
தன்னைச் சுடுமுன்னே

தான்செய்த மாயத்தைத்
தானொருத்தி மேலிட்டுக்
கோவலனார் இல்லம்
குறுகியதும், கண்ணகிதன்

காவலனைக் கண்டு
கனிமுறுவல் பூத்துச்
சிலம்புள கொண்மெனஅச்
சேயிழையை அன்னோன்
''எழுக' எனும் போதே
இழந்துவிட்ட தொல்பதியை

நெஞ்சே,

நாமொருநாள் காண்போம்
நடந்த கதைகேட்போம்
தேமொழியின் யாழைத்
திரும்பவும் பேசவைப்போம்
கொள்ளை அழகு
கொலுவிருக்க, நெய்தலென

வெள்ளைமணல் பூத்து
விளங்கும் கடற்கரையில்
'காரெழுதிக் காமன்'
கலையெழுதிப் போவாரை

'ஊர்திரை நீர் வேலி
உழக்கித் திரிவாரை'
ஒவ்வாய் நடையென்
றொருபுள்ளைக் காய்வாரை

கள்வாய்ச் சிறுநீலம்
கண்ணொவ்வா தென்பாரை
பொன்மீன் உணங்கஅதைப்
புள்ளோச்சிக் காப்பாரை

கண்மீன் உணங்கஅதைக்
காவாது நிற்பாரை
ஆருயிரைக் கொல்லும்
அணங்கிதுவோ என்பாரை
ஊர்சுணங்கு மென்முலையால்
உய்யாநோய் தீர்வாரை

நெஞ்சே,

நாமொருநாள் காண்போம்
நடந்த கதைகேட்போம்
தேமொழியின் யாழைத்
திரும்பவும் பேசவைப்போம்

பொன்மயிலை ஒக்குமோ
பூம்புகார்? அம்மயலின்
கண்வாற் படந்தான்
கடற்பரப்போ? ஆங்கே

ஒருசிறகாய்த் தோன்றும்
ஒருமருவூர்ப் பாக்கம்
மறுசிறகாய்த் தோன்றும்
மறுபட் டினப்பாக்கம்

பாக்கம் இரண்டும்
பயில்பூஞ் சிறகாக
மாக்களெனும் பார்ப்பை
மருவும் மணிமார்பாய்

நாளங்கா டிச்சோலை
        நட்ட நடுவிடத்தில்
நாளும் ஒலிமிகுந்து
        நாள்முழுதும் ஆர்ப்பதுண்டாம்!

நெஞ்சே,

நாமொருநாள் செல்வோம்
        நடந்த கதைகேட்போம்
தேமொழியின் யாழைத்
        திரும்பவும் பேசவைப்போம்

தேம்பும் மடநெஞ்சே!
        தேம்பாதே! நாம்விரைவில்
பூம்புகார் காணப்
        புறப்படத்தான் போகின்றோம்!

காலம் அழைக்குமென்று
        காத்திருக்கச் சொன்னேன்அவ்
வேழை மனந்தான்
        இனியும் பொறுப்பதுண்டோ?

அண்ணா, நீ,

''பூவிரித்த கானலிலோர்
        போகம் பழுத்ததெனும்
காவிரிப்பூம் பட்டினத்தைக்
        காவியமாய்த் தாரீரோ?

நாவிரிப்பார் பேரவையில்
        நான்வியக்க, நீரந்தப்
பாவிரித்தே என்றன்
        பரிசுபெற வாரீரோ?''

என்றழைத்த அன்பழைப்பை
        இந்த மனங்கேட்டுக்
கன்று குதிப்பதுபோல்
        கட்டவிழ்ந்து கூத்தாட,

நான் கேட்டேன்,
''பித்து மனப்பேடே!
        பேரறிஞர் நம்கவிக்கு
வைத்த பரிசென்ன?!
        வழங்கும் தொகையென்ன?'

குத்து மதிப்பேனும்
கோடிட்டுக் காட்டினரோ?
மன்னன் கரிகால்
வளவனோ நம்மண்ணன்?

பண்டு பதினறு
நூறு யிரம்பொன்
உருத்திரங் கண்ணனெனும்
ஒண்புலவர்க் கேற்ற

பரிசளித்தன் றோபெற்றான்
பட்டினத்துப் பாலையினை?''
என்றேன், என, என்னை
ஏளனமாய்ப் பார்த்துவிட்டு

விண்ணென் றெழுந்தந்த
வேகமனம் பேசியது :
''மன்னன் கரிகாலன்
மாமரபில் வந்தவனைத்

தென்னர் புகழைத்
திசைதோறும் வைப்பவனை,
பாட்டு மடைதிறக்கும்
பக்கமெலாம் நிற்பவனை

ஊற்றுத் தமிழால்
உலகூட்டும் உத்தமனை
சாய்ந்த மரபு
தலைநிமிர்த்த வந்தவனை

ஒய்ந்த கவியை
உயிர்ப்பித்துத் தந்தவனை
நாம்விரைவில் காண்போம்
நடந்த கதைசொல்வோம்

பூம்புகார்ப் பட்டினத்தைப்
போயின்றே நாம்கொணர்வோம்
அண்ணனுக்குக் காட்டி
அவன்மனத்தை நாம்பெறுவோம்
மன்னனவன் நெஞ்சைவிட
மாப்பரிசும் வேறுண்டோ?''

என்றாங்கே,
ஒற்றை மனப்புள்
உயரப் பறந்ததுவே!

நானும்,
கற்பனையாம் தேரைக்
கடிதுருட்டிப் பின்தொடர்ந்தேன்!
அந்தோவந் தோவந்தோ
அந்தோநான் என்னென்பேன்!

அந்தோவந் தோவந்தோ
அந்தோஈ தென்னென்பேன்!
ஒற்றை மனப்புள்
உணர்வற்று வீழ்ந்ததுவே!
கற்பனையாம் தேரும்
கடலுக்குள் வீழ்ந்ததுவே!

ஆம், அங்கே,

கண்ட தெதுவுமில்லை
காண எதுவுமில்லை
விண்டுரைக்க வொண்ணாத
வேதனையில் எங்கிருந்தோ

மாயக் குரலொன்று
மாக்கடலின் ஆழத்தே
ஓய்ந்துறங்கும் பட்டினத்தை
உற்றுற்றுத் தேடிற்றே :

"நகரமென நேற்றிருந்த நகர மெங்கே?
நாகரிகம் வீற்றிருந்த சிகர மெங்கே?
பகலெங்கே? ஒளியெங்கே? பாழி ருட்டில்
பழம்புதையல் புதைந்தஇடம் எங்கே? எங்கே?"

கானலிலே யாழெடுத்த கன்னி எங்கே?
கரையெங்கே? துறையெங்கே? காதல் எங்கே?
வேனிலெங்கே? மாரனெங்கே? வீதி எங்கே?
வேந்தனுக்கு விழவெடுத்தார் சேதி எங்கே?

முறையெங்கே? இறையெங்கே? முடிக ளெங்கே?
முறைமைக்கும் இறைமைக்கும் குடிக ளெங்கே?
அரசெங்கே? முரசெங்கே? ஆட்சி எங்கே?
அரசுக்கும் முரசுக்கும் வீழ்ச்சி இங்கே!

குழலெங்கே? யாழெங்கே? பாண ரெங்கே?
கொட்டெங்கே? தட்டெங்கே? கூத்த ரெங்கே?
அழகெங்கே? கலையெங்கே? ஆட லெங்கே?
ஆடலுக்கும் பாடலுக்கும் மாத ரெங்கே?

கம்மியரும் காருகரும் புதைந்த தெங்கே?
　　கைவினையும் செய்வினையும் சிதைந்த தெங்கே?
தொன்மணிகள், பொன்னணிகள் மறைந்த தெங்கே?
　　சுண்ணங்கள், வண்ணங்கள் கரைந்த தெங்கே?

கரையருகே கலங்கரையும் விளக்க மெங்கே?
　　கண்விழிக்கும் இடந்தோறும் விளக்க மெங்கே?
துறையருகே மணிமாட விளக்க மெங்கே?
　　தொல்பதியைத் தேடுகிறேன் விளக்க மெங்கே?



# தேன் துளிகள்

[பரிசும் பாராட்டும் பெற்ற கவிதைகள் அல்லாமல் மற்றக் கவிதைகளிலிருந்து சுவையான பகுதிகளைத் 'தேன் துளிகள்' என்ற தலைப்பில் இங்குத் தரு கின்றோம்.]

கோடுயர்ந்த சையமலை முடியின் மீது
குழந்தையெனத் தோன்றிவளர் பொன்னி யாறு
காடுயர்ந்த முல்லையிலே செழுமை தேக்கிக்
கவின்மிகுநல் சோலைகளை விரியச் செய்து
நாடுயர்ந்த மருதநிலம் தவழ்ந்து போந்து
நல்வளமும் நகர்பலவும் திகழச் செய்து
பீடுயர்ந்த புகார்நகரில் கடலிற் சேரும்;
பெற்றியுறும் அந்நகரின் பெருமை என்னே!

—நா. தண்டபாணி, வடகாடு.

வங்கத்தின் சூல்முதிரப் பெற்றெடுத்த குழவி
வான்தவழ வரும்கதிரோன் இளமுகமும் தோன்ற
தங்கத்தின் மேனிதவழ் தளிர்பட்டுச் சரிய
தங்கணவர் மார்சாய்ந்த கிளிமொழியார் எங்கும்
தங்களுடை சீர்செய்து தெருக்கதவம் திறக்க,
தமிழ்மணக்கும் குரலெங்கும் தத்தியுமே குதிக்க,
பொங்கும்பாற் குடம்கவிழ்தல் போல்ஒளியைக் கொட்டிப்
புறப்பட்டான் இளங்கதிரோன் புகார்நகரைக் காண!

நடுவானில் கொடுந்தீயாய் நின்ற வாறு
நல்லபுகார்ப் பட்டினத்தைக் கண்டு வெட்கிக்
கொடுமையினை விடக்கருதிக் கதிரோன் மெல்லக்
குளிரேற்றி ஒளிமாற்றி மேற்கில் செல்லத்
தொடுவானில் இளநெஞ்சக் கனவு தோன்றும்
தொடர்கின்ற நிழல்நீளும் நகர மெல்லாம்
கடுகியவர் வினைமுடித்துக் களிக்க வேண்டிக்
காதலியர் துணைநாடி இணையப் பார்ப்பார்!

—மா. ப. குருசாமி, எம்.ஏ.

வானைத் தொடுமென மாளிகை யின்நிரை
வாவியும் கொண்டதுவாம்!— புகார்
தேனைப் பழிமொழி, மானைநி கர்விழி
தேவியர் மண்டியதாம்!

தூய்மை நெறியினர், வாய்மை யுரையினர்
துல்லியர் வாழ்வதுவாம்! — அது
தாய்மை யுயர்வினைச் செய்மையி லின்றியே
தன்னகம் கொள்வதுவாம்!

—கு. பாலசுப்ரமணியன்

மேழிச் சிறப்பாலே மிக்கவளந் தேக்கித்தன்
ஆழிக் கணவனுடன் அன்பாய் அணைவதற்குக்
காவிரிய வந்தே கடலோர ஊரிடையிற்
காவிரிபோம் பட்டினமே காவிரிப்பூம் பட்டினமாம்!
முத்துமிழும் சங்கு முழங்குங் கடல்நகரம்!
முத்தமிழும் பொங்கி விளங்கும் புகார்நகரம்!
நட்டோர் புகும்புகார்! நண்ணார்வந் துட்புகார்!
கெட்டுப் பிறநகரம் கிட்டார்அப் புகார்நகரார்!
வாரியுண்ட நீரின் வளத்தால் பொழிகின்ற
மாரி வளங்குறையா வண்மையினால் காவிரித்தாய்
குன்றிற் பிறந்து குமுறும் கடல்தழுவி
நின்று புகழ்பாடும் நீண்ட புகார்நகரம்!
கோட்டை மதில்மேல் கொடிக்கம்பத் துச்சியின்மேல்
கேட்டை அழிக்கக் கிளர்ந்தெழுந்து சோழர்பகை
மாயும் படியாக மாற்றாரைக் கொன்றே,விண்
பாயும் புலிக்கொடியால் பாராண்ட பண்டைநகர்!

—புதுமதியன்

புகார்மக்கள் பகைகருதி வேற்று நாட்டில்
புகார்என்றும்! மங்கையர்தாம் வேற்று நெஞ்சில்
புகார்என்றும்! கவருதற்கே வேற்று நாட்டார்
புகார்என்றும்! ஏதுமிலை என்றே யாரும்
'புகார்'செய்யார். கரைகாணாக் காத லாலே
பொதுநிலவும் கதிரவனும் கடலின் நீரும்
புகாதென்றே யார்சொன்னார்?! பாடல் சால்பூம்
புகார்என்றே புகார்நகரைப் போற்றிச் சொன்னார்

—சத்திரமனை — சித்திரக்கவி.

கண்ணகத்து மணியாம்இப் புகார்ச்சேர ழூர்க்குக
காவிரிப்பூம் பட்டினம்,பூம் புகார்,கா கந்தி,
மண்ணகத்து வான்பதி,நற் சோழர் ஊராம்
மகிழ்சம்பா பதி,கோல ஊராம் — யாவும்
விண்ணகத்து நிலாப்போலத் தென்ன கத்தில்
விளங்கிவந்த புகார்ப்பேராம்! தேவா ரத்துப்
பண்ணகத்தில், மேகலையில், அகம்,பு றத்தில்,
பட்டினப்பா லையில்,சிலம்பில் புகார்ம ணக்கும்!

—இல. இராசேந்திரன்.

மடலவிழ் தாழை புன்னை
மணமது சூழக் காதல்
உடலுயிர் கலந்த வாழ்வின்
உயர்மணம் கரையில் சூழக்

கடலுடன் காவி ரிப்பெண்
கலந்திடும் திரும ணத்தின்
திடலதிற் பூம்பு காரின்
திகலெழில் பிறந்த தம்மா!

கள்வம் அறியார், கலையறிவார்;
கன்னித் தமிழின் கவிதையுடன்
தள்ள முடியாக் குழலிசையும்
தனியாழ் அமுதும் இயல்கூத்தும்

வெள்ள மதுவாய் நெஞ்சினிலே
விளைவிப் பார்காண் புகார்மாந்தர்!
கொள்ளை யழகின் இருப்பிடமாம்
குன்றுப் புகழ்சேர் புகார்வாழி!

—மின்னூர் சீனிவாசன்

பிறப்புக்கு மிறப்புக்கு மிடையிற் செய்யும்
பெருந்தொண்டே மாந்தர்க்கு வாழ்க்கை யென்னும்
மறுப்பற்ற உண்மையினை மாந்தர்க் கெல்லாம்
மறுவறவே உணத்தற்குத் தானே சான்றாய்ப்

பொறுப்புற்று நிலமெல்லாம் வளம தாக்கிப்
பூந்தென்றல் வீசுங்கா விரியு மாக்கிப்
புறப்பட்டு வந்ததிருப் புனலாம் ஆறே
புகுந்துகடற் கலந்தவிடம் பூம்பு காரே!

கர்விரிக்கே அணைகட்டிக் கரும்பும் நெல்லும்
கழனியெலாம் செழித்திடவும் கவிஞர் நாவில்
பாவிரியத் தமிழ்வளரப் பாடல் ஆடல்
பல்கலையும் செழித்திடவே பரிசும் ஈந்து

பாய்விரித்த கப்பல்பல நாட்டி னின்றும்
பண்டங்கள் ஏற்றிவர வணிகம் ஓங்கத்
தாய்வளர்த்த மக்களென நாட்டு மக்கள்
தமைவளர்த்த பெருவளத்தான் புகழே வாழ்க.

—வே. மகேந்திரன், மலேசியா.

''பாராண்ட பல்லவர்கள் படையெடுத்தார் வடமண்ணில்
என்ப தல்லால்,
வேராண்ட வீரத்தை விட்டெறிந்தார் பகைமண்ணில்
என்ப துண்டோ?
ஏராண்ட புனல்நாட்டுக் கரிகாலன் புலிபொறித்தான்
என்ப தல்லால்,
போராண்ட வடமண்ணில் போய்விட்டான் முதுகிட்டே
என்ப துண்டோ?''

புன்னைக் குவிமொட்டும் புறத்தே மணல்திட்டும்
கண்ணைப் பறித்திழுக்குந் தாழை மலர்மொட்டும்
விண்ணைத் தொடநிற்கும் மாட அறைஎட்டும்
என்னைப்''பார்'' என்னும் மின்னிற் கொடியென்னும்

அன்னம் நடைசொல்லும் அழகு மயில்என்னும்
பின்னல் பாம்பென்னும் விழிகள் மான்என்னும்
கன்னல் மொழிஎன்னும் காதல் விழிசொல்லும்
பெண்ணை நான்கண்டேன் 'புகாரே' எனநின்றேன்.

—புலவர் மா. சொக்கலிங்கம்.

காவிரியின் ஓரத்தில் கரிகாற் சோழன்
காத்திருந்த பொற்கோட்டை, வண்டு பாடும்
பூவிரிந்த சோலையிலே கூவு கின்ற
பொற்குயிலின் இன்னிசையாம், புலவர் கூறும்

பாவிரிந்த காப்பியத்தில் தேக்கி வைத்த
பைங்கனியாம், யாவருமே போற்று கின்ற
நாவினிக்கும் நறுந்தேனும் பூம்பு காரின்
நலமெல்லாம் உரைப்பதற்கு நாட்க ளுண்டோ?

—ஆலந்தூர் கோ. மோகனரங்கன்.

புகாரிலொரு நாள்என்னநான் நினைத்த போதே
புகுந்துகடல் அழித்தபழம் புகாரும், அன்று
புகாரெதுவும் தோன்றாமல் ஆட்சி செய்த
புகழ்முடியான் கரிகாலன் சிறப்பும், வீணே

புகார் செய்தே ஆட்சியனைத் கவிழ்க்கப் பார்க்கும
பொய்யர்களே இல்லாத அந்நாள் மாண்பும்
புகார்முழுதும் சான்றோர்கள் நிறைந்தே நன்மை
புரிந்துவந்த நிகழ்ச்சிகளும் கண்முன் கண்டேன்.

பழம்பெருமை யுடையபுகார் நகரம் இன்று
பார்த்திடவும் கிடைப்பதில்லை; ஆனால் இன்று
பழச்சுவையைப் பண்சுவையில் கூட்டித் தந்து
பாடிவைத்த புலவர்களின் ஏட்டில் நின்று
நிழற்படம்போற் காட்சிதரும் புகாரைக் கண்டு
நெஞ்சினிலே ஊறிவரும் உவகை தன்னை
மழைதழுவும் மலையெனவே கொண்டேன் அந்த
மலையடியில் காவிரியும் தோன்றக் கண்டேன்!

—கயற்கண்ணன்

காவிரிப்பெண் கடல்மன்னன் மடியில் வீழும்
காட்சிகண்டேன்! புகார்நகரைக் காண வில்லை!
பூவிரித்த சோலைகளும் அங்கே யில்லை
பூவிரித்தாற் போல்மணல்தான் பரவக் கண்டேன்!
பாவிரித்துப் பாவலர்கள் பாடி வைத்த
பட்டினப்பாக் கம்மருவூர்ப் பாக்க மில்லை!
நாவிரித்து நான்சொல்ல ஒன்றே உண்டு
நலந்திகழும் கண்ணகியின் சிலைதான் அஃதே.

—வளமதி

அழுக்கில்லா நெஞ்சங்கள் கோடி கண்டேன்
அன்பென்னும் தத்துவத்தின் உண்மை கண்டேன்
சழுக்கில்லாப் புணர்வாழ்வின் புதுமை கண்டேன்
சாத்திரங்கள் பேணுதலைப் போற்றி நின்றேன்
இழுக்கில்லா "வாய்மைநிலை" வீறு கண்டேன்
இழிவறுமை பிணியின்றி உயர்ந்த வாழ்வு
கொழிக்கின்ற பெரும்பேற்றின் பெற்றி கண்டேன்
கொடிகட்டிப் பாராண்ட பூம்பு காரில்!
தத்துவத்தைக் கற்றுணரத் தனிமை போதும்
தமிழ்பயிலக் குழந்தைமனம் ஒன்று போதும்
புத்துலகை ஆக்குதற்குப் பண்பே போதும்
புகழ்பரப்ப நாவொன்றே சாலப் போதும்

சுத்துகட்ல பொங்கியெழத் திங்கள் போதும்
கலைபயில உளம்போதும் கற்ப வர்க்குப்
பு. துணர்வே காதலுக்குக் கண்கள் போதும்
பூம்புகார்ப் புகழ்சாற்ற எதனைச் சொல்வேன்.

—சொ. அ. கணிகாசலம்

மலையிடைப் பிறந்து வீழ்ந்து மருதமாம் நிலத்தில் பாய்ந்து
விலையிடப் படாத செந்நெல் விளைவினைக் கொட்டும் பொன்னி
அலையிடைச் சேரு கின்ற ஆழிவாய் முகத்தே நின்ற
தலைநகர் புகாரே என்றார்! தஞ்சமாம் இன்பம் அங்கே!

—த. பத்திநாதன்

அண்ணாந்த புகழ்பெற்ற பூம்பு காரில்
அடியெடுத்து வைத்தவுடன் ஆங்கோர் பையன்
''தண்ணீருங் காவிரியே'' என்றான். உங்கள்
தார்வேந்தன் யாரென்றேன்.? 'சோழன்' என்றான்.
''கண்ணீரில் கரைந்தவள்யார்? என்று கேட்டேன்
கண்ணகிதான் என்றுரைத்தான். வழியில் ஓர்பெண்
வெண்பாவை இரண்டுமுறை எடுத்துக் கூற
வேறொருத்தி அப்படியே விளம்பி விட்டாள்.

நிழல்நெருங்கி விளையாடும் பூம்பு காரில்
நிதிநெருங்கி உறவாடும் இடமாம் ஆங்கே;
மழைமயங்கும் மாளிகைகள்; மாட கூடம்
மாமன்னன் அரண்மனைகள்; இசைய ரங்கம்
பிழைவிளங்கும் வெண்ணிலவின் ஒளியைக் கீழே
பிடித்திழுக்கும் முற்றங்கள்; இல்லந் தோறும்
இழைவிளக்கின் ஒளியரும்பு, தெளிந்து மின்னும்
எண்ணெயிலே முகம்பார்க்கும் காட்சி கண்டோம்.

—ந. புதூர். நாவரசன்

பூவிரித்துப் புகழ்விரித்த பொன்னி யாறு
புகுந்துகடல் முத்தமிடும் வளத்தின் பேழை
நாவுகின்ற கடல்துறையூர்; தந்தி மீட்டித்
தமிழிசைக்கும் இசைப்பேரூர்; புலவ ரெல்லாம்
பாவிரிக்கும் கவிக்கூடம்; மணிப்பொன் னோடு
பலமதத்தார் திறங்கூடும் துறையு மாகும்.
மூவரசுத் தமிழ்ப்பொழிலாம் பூம்பு காரின்
முன்னேற்றம் பலதுறையில் அன்றோ அந்நாள்.

—மு. சிவராசன்.

போற்றி போற்றியோ பூம்புகார் போற்றிகாண்!
பொன்னியாறு புகும் புகார் வாழியே!
நாற்றிசைப் புகழ் நாளெலாம் நாட்டியே
நல்ல சோழர் குலத்தினை ஏற்றியே
சேற்றைக் கொண்டு மடைசெயும் சோழனின்
துறைமுக நகர் விழவ்ய ராப்பதி
ஏற்ற முற்ற செங்கோல் சிறப்பினால்
எங்கும் பல்வளம் தங்கிச் சிறந்தன.

—க. க. வள்ளியம்மை

குன்றதனிற் குடபுலத்தில் அருவி யாகக்
குதித்தோடி ஆறாகி நடந்து வந்தே
ஒன்றுமிடம் ஒலிகடலைக் காவி ரித்தாய்
உளமாரத் தழுவுமிடம்! புகாருக் குள்ளே
சென்றடையும் நதிதவிரப் பகைவர் யாரும்
சென்றுபுகார்!; வறுமையினாற் பிறநாட் டிற்குச்
சென்றுபுகார் புகார்நகரார் என்றால் அந்தச்
செழுநகரின் வளம்பற்றி விரித்தல் ஏனோ.

பொன்வளத்தால் பொன்னியெனப் பொலிந்தும்; வற்றாப்
புனல்வளத்தால் காவிரித்தும்; காவி ரித்தாய்
தன்வளத்தால் வயல்வளத்தைப் பெருக்கிச் சோற்றுத்
தனி வளத்தால் சோழவள நாடென் றாக்கி
மன்வளத்தால் மாவளவர் எனுஞ்சி றப்பை
மன்னர்க்கு வழங்கியவோர் பெருமை கொண்டே
தன்வளத்தால் கலமேறும் பொருள்கள் தம்மைத்
தான்காணக் காவிரிபோம் புகாருக் குள்ளே.

—க. உத்தமி

கலைத்தலைவி மாதவிக்குத் தலைக்கோல் தந்த
காவலர்கள் செங்கோலால் ஆண்ட ஊரே
இலைபோல நீவாழ்ந்த நாளில் ஓர்நாள்
இனிக்கின்ற உணவைப்போல் உன்மேல் வாழ்ந்தோர்
நிலைத்தபுகழ்ச் சங்கத்துத் தமிழர் வாழ்வை
நினைக்கின்றேன் உவக்கின்றேன் இன்றோ எச்சில்
இலையிலுள்ள மீதம்போல் கிடக்கும் மக்கள்
இழிநிலையைக் காண்கின்றேன் வருந்து கின்றேன்.

வற்ருத பாலாற்ருல் தமிழ கத்தின்
வளமுலையாம் குடகுமலை சுரக்கும் நீரால்
கற்றறிந்த மூதறிஞர் பேச்சின் வேகக்
காவிரியால் பாலுண்ட நகரே! நீரால்
இற்றுவிட்ட இரும்பைப்போல் ஆனுய்; உன்னை
இரையாக்கும் கடல்நீராம் கரையான் வாழும்
புற்ருனுய்; அடரமிலம் பட்டு விட்ட
புதுநூலாய் நீயானுய் புகையாய்ப் போனுய்.

இதயத்துத் துடிப்பொலியே! குறுந்தொ கையில்
இனிக்கின்ற சிறுபாட்டில் உயிர்து டிக்கும்
முதுபுலவர் பெயர்வரியே! சிலம்பி லுள்ள
முத்தே!உட் பரல்மணியே! தமிழ கத்தின்
மதிமுகமே! மதுநிலவே! கடலா டைக்குள்
மறைந்திருக்கும் மார்பகமே! என்மு கத்தில்
பதிந்திருக்கும் ஒளிவிழியே! சோற்று நாட்டின்
பசுமைநிற நெல்வயலே! இன்னுங் கேட்பாய்.

—இரா. சீனிவாசன் (பரணன்)

நல்லபெரும் அரண்மனையாம் உலகம் தன்னில்
நாடாளும் தலைமன்ரும் தமிழ நாட்டின்
செல்வமிகும் அரசவையின் மன்றச் செல்வர்
செவ்வடியால் நடத்தற்காம் விரிப்பே போல
மல்குபுகழ் வெளியுலகில் கலங்கள் ஓட்டி
வளநிதிகள் குவித்தற்காம் வாயில் ஆன
தொல்புகழால் விளங்குபுகார் நகரின் ஏற்றம்
தொகுத்துரைத்தல் இந்நாளில் எளிதே ஆமோ.

அறிவென்னும் பேரொளியாம் இந்நாள் விட்டே
அகன்றகன்று பின்னேக்கி இறங்கிக் கீழே
செறிகின்ற இருட்கடலில் குடைந்து நீந்தித்
திரள்இருளில் படிப்படியாய் நுழையும் போழ்து
நெறிகாட்டும் கலங்கரைநல் விளக்கம் போல
நீள்புகழின் இனியபுகார் நகரம் மின்னும்
அறியாமை இருளிடையில் சுடரும் பேரூர்
அகமகிழும் கனவுலகில் மிதக்கச் செய்யும்.

—மனசை ப. கீரன்

நீரோடும் ஆற்றின்நீர் விரைந்து வந்து
நீர்தத்தும் கடலோடு பொருந்தி நின்று
போராடும் காட்சியினைக் கண்டேன். கண்கள்
போராட மனையாளைச் சிரித்துப் பார்த்தேன்

நீராடி மேலாடை நிமிர்த்து (உ)லர்த்தும்
நீள்விழியாள் போல்நிற்கும் பாய்ம ரங்கொள்
நீரோடும் தேர்க்கப்பல் நிற்றல் கண்டேன்
நின்றிருந்தான் ஒருவனவன் அருகிற் சென்றே
ஏதிந்த ஊரென்றேன் நிமிர்ந்தான்; கேட்டான்
இதுகூடத் தெரியாத தமிழர் உண்டா?
மூதறிஞர் புகழ்ப்பாட்டு முத்தம் பெற்ற
முத்தாரத் திருநகராம் புகார்தா னென்றான்;

ஓ! தம்பி இவ்வூரின் பெயர்க்கே தேனும்
ஒழுங்கான காரணமும் உண்டா என்றேன்
சூதென்னும் கொடுமைமிகு பகைவர் யாரும்
சூழ்ந்திதனுள் புகாரதனல் புகாராம் என்றான்.

காவிரித்தாய் காலெடுத்து நடம்ப யின்று
கடல்நோக்கி வரும்வழியில் குளிர்பூக் கொஞ்சும்
கா,விரித்தாள்; காதலர்க்குப் பூவி ரித்தாள்
கண்விரித்தாள் கயலுருவில்; கவிதைச் செல்வர்
நாவிருக்கும் நற்றமிழில் வாழும் பொன்னி
நறுமலரின் காவிரித்த பட்டி னத்தைக்
காவிரிப்பூம் பட்டினமாய்ப் பெரியோர் சொன்னார்
காண்பிப்பேன் நகர்வளத்தை வருக! என்றான்.

—சே. பீ. நைசாம் முகமது இக்பால்

பூவுலகம் நாகரிகம் கற்கும் முன்னே
பொன்தமிழர் நாகரிகம் பூண்ட தெல்லாம்
மேவுதமிழ்ப் பண்பாடும் மேன்மைப் பாட்டு
மென்கலைகள் கவின்கலைகள் எல்லாங் கொண்டு
நாவுரைக்க வொண்ணாத சீர்த்தி யிந்த
நானிலத்தில் பரப்பியநல் வரலா றெல்லாம்
பாவுரைக்குந் தமிழ்ப்புலவர் நாவில் நின்று
பாருணரச் செய்தநகர் பூம்பு காரே!

கற்புக்குப் பொருளாங்கண் ணகியாள் மென்மைக்
காலடிகள் பட்டநகர்! காதல் என்னும்
பொற்புக்குப் புதுவிளக்கந் தந்த மாதர்
பொலிந்திருந்த பொன்னகர்காண்! போர்மு ழக்கும்
வெற்புக்கு நிகரான தோள்ப டைத்த
வீரருறை பாசறையாம்! வேற்று நாட்டார்
தற்புகழ்ச்சி கொண்டோராய்த் தமிழைத் தாழ்த்தின்
தணலாகப் பாய்ந்தழித்தோர் ஆர்க்கும் கூடம்!

—ப. தமிழ்மணி

கரிகாலன் போர்வேட்டு வடக்கெழுந்து சென்று
கதவேந்தர் பற்பலரைக் களத்தினிலே வென்று
பெருமேரு குறுக்கிட்டுத் தடுத்ததனுல் வெறித்துப்
பெருஞ்செண்டால் அடித்தருளி வேங்கையினைப் பொறித்துத்
திரும்புகையில் மகதமன்னன் போரிட்டுத் தோற்றுத்
திரையாகத் தந்தபட்டி மண்டபமும் அவந்தி
அருவாயிற் ருேரணமும் வச்சிரத்தான் தந்த
ஆணிமுத்தும் புகார்நகருக் கணிசெய்யக் கண்டேன்.

—பாவலர் குயில்

பூவிரித்த சோலையெலாம் புனல்விரித்துப் பாடிப்
பொன்னியவள் நடமாடும் இன்னருளைக் கண்டோ
பாவிரித்துப் புலவோர்கள் பரவு புகழ் கொண்டோன்
படைவிரித்த கரிகாலன் குடைநிழலைக் கண்டோ
தீவிரித்துச் சுட்டெரிக்குந் திறமுடைய கற்பின்
திருவிளக்காங் கண்ணகியின் திறலஞ்சித் தானே
காவிரிப்பூம் பட்டினத்தைக் காய்சினத்து வெய்யோன்
கண்டாலும் அயலான்போற் காணுதே செல்வான்

—புதுவை சுப்பிரமணியன்

பகைவந்து புகாநகரம் மக்கள் வாழ்வில்
பசிவந்து புகாநகரம் பிணியாம் துன்பப்
புகைவந்து புகாநகரம் தீமை ஏதும்
புகாநகரம் புகார்நகரம்! பிழைப்பைத் தேடித்
தொகைமாந்தர் வேறிடத்தை நாடிச் சென்று
தொழாநகரம் விழாநகரம் வெல்லத் துள்ளும்
பகையெங்கே பகையெங்கே என்று கேட்டுப்
பசித்திருக்கும் புலிச்சோழர் நகர மாகும்

—மு. மேத்தா. பி.ஏ.

மயிலாடப் பூத்த மலர்தலை யாட்டக்
குயில்பாடும் காவிரிச் சோலை — உயிர்மானப்
பூவாடை போர்த்துப் புதுப்பெண் நடைபயிலும்
பாவாடைப் பொன்னிப் புகார்.

—சு. இராம. இளங்கோ.

சோற்ருலே மடையடைக்கும் சோனுட்டின் தலைநகராய்
ஊற்ருலே உலகூட்டும் ஒளிசேர்க்கும் காவிரிப்பொன்
ஆற்ருலே அணிசெய்யும் அருந்தமிழர் தொன்னகரம்
பேற்ருலே நிறைநகரம் பேர்பெற்ற புகாரதுவே.

—சி. கோவிந்தசாமி

ஈரா யிரமாண்டில் எத்தனையோ மாற்றங்கள்
பாரா யிரம்பெற்றுப் பல்கி மறைந்தாலும்
ஓரா யிரங்கதைகள் உரைப்பேன் வருகவெனச்
சீரா யிரங்கொண்ட தேனூர் புகார்சொல்லும்

—இராம. சாமிநாதன்

பூவிரித்து மணம்பரப்பும் சோலை! தெள்ளு
புனல்விரிக்கும் மலையூற்று பசும்பொ ழில்கள்!
நாவிரித்துப் பேசுங்கால் செவியைத் தேனில்
நனைக்கின்ற இனியதமிழ்! யாழெ டுத்துப்
பாவிரிக்கும் பாவாணர் ஆடற் பெண்கள்
பயனுள்ள பெருவணிகர் அடடே இந்தக்
காவிரிப் பட்டினத்தின் இனிய சூழல்
கண்ணுக்கும் கருத்துக்கும் தெவிட்டா இன்பம்

—பூவையர்கோவன், புதுவை.

காவிரிப்பூம் பட்டினமே கலைவளர்த்த பெட்டகமே
கண்மணியைக் குளிப்பாட்டும் விண்ணழகே தண்ணெழிலே
பூவிரித்துப் புனல்இரித்து பூமியெலாம் புகழ்விரித்து
பொன்னூர்ந்த தனிச்சுடரே புவியாண்ட நற்பதியே

காவிரித்து கனியுதிர்த்து கவியுமிழ்ந்து பாவுதிர்த்து
கலம்மிதக்கி வளம்வழங்கி களிப்புதிர்த்த திருநகரே
சாவிரித்த களையானாய் சவுக்குமரத் தோப்பானாய்
சஞ்சலத்தில் ஊசலிடும் சரித்திரத்தை விரித்துவிட்டாய்

பொன்னிமகள் குடகுமலை விட்டெ ழுந்து
புதுவெள்ள வாய்ச்சிறப்பைப் புனலு தட்டில்
மின்னவிட்டு விழிக்கயலை நெளிய விட்டு
விரிந்தமடல் தாதுசினை வாரிப் பூசித்

தென்காலைப் புனலாட்டி சோழ நாட்டில்
திருக்கோலம் வழங்கிவரும் நிலத்தின் பேரே
என்பேராம் புகாரென்றே அழைப்ப துண்டே
இப்போது நானில்லை பேர்தான் உண்டே!

—கவிஞர் குடியரசு

பாவிரிப்போர் ஒருபக்கம் யாழ்ந ரம்பின்
பாங்குரைப்போர் ஒருபக்கம் பொழில்கொ டுத்த
பூவிரிப்போர் ஒருபக்கம் ''ஆட்ட னத்தி''
புனலின்மேல் ஆடலுற அரங்க மான
காவிரியாள் இருகரையில் மலர்ந்த பூவை
கவின்துகிலாய் போர்த்திநடம் புரிந்த பாங்கும்
காவிடையில் நெடுமரத்தில் மாளி கைபோல்
கடையமைத்த எழில்யாவும் மிகும்பு காரே!

—ஓடைப்பட்டி. வெ. சுப்பையா

இன்னலதரு சேட்-சென்னி மன்ன னென்றும்
இலவுகாத் தகிள்ளேயென எய்துந் தன்மை
கன்னல்மொழிப் பெரும்புலவர் பேணிக் காத்த
கரிகாலன் நீதிதனைக் கப்பல் கட்டும்
பொன்னகராய்க் காவிரிப்பூம் பட்டி னத்தைப்
புதியவொரு தலைநகராய்ப் போற்றி வைத்தும்
உன்னரிய இமயமதிற் புலிபொ றித்தும்
உபகண்டம் ஆண்டகதை உலகம் வாழ்த்தும்.

—இலங்கை பண்டித ஞானி

பாருக்குத் தமிழ்நாடும் மொழிக ளுக்குப்
பைந்தமிழும் நூலுக்குக் குறளும் போலே
ஊருக்குப் புகார்! அந்த ஊரை எங்கே
ஒளித்திட்டாய்? சூழ்கடலே காட்டு! காட்டு!

பேருக்குச் சிற்றூரை விட்டு வைத்தாய்
பிழைசெய்தாய் என்றரற்றிச் சாய்ந்தேன் அப்பால்
ஆருக்கும் தெரியாது நடந்த தெல்லாம்
அக்காலப் புகழ்க்கனவில் ஆழ்ந்திட் டேனே.

—தில்லை வாணன்

நீர்பூத்த காவிரியின் நிறைவி னாலே
நிலம்பூத்த விளைபொருளின் நிதியி னாலே
பார்பூத்த மன்னரது பண்பி னாலே
பலன்பூத்த மக்களது பணியி னாலே
தார்பூத்த புகழ்படைத்த தமிழி னாலே
தலைபூத்த நல்லறிஞர் சால்பி னாலே
சீர்பூத்த நூல்பயிலும் திறம்ப டைத்துச்
சிரம்பூத்த புகார்நகரம் சிறந்த தன்றோ!

—சீ. விநாசித்தம்பி

திருந்தியநற் செந்தமிழர் செல்வநிலை
நாகரிகம் தெளிந்தெந் நாடும்
பொருந்துவகை புரிந்தகலங் கரைவிளக்காம்
பூம்புகார்ப் புதைவை யுன்னி
வருந்திநிற்கும் மறத்தமிழா! வற்றாத
காவிரித்தாய் யான்வாய் மூடி
இருந்தனன்பன் னூற்றாண்டா விருங்கடலுள்
மறைந்தபுகார் மகளை யெண்ணி!

—சி. ஆறுமுகம்.

ஊரென்றால் உறையூரைச் சொல்வர் பண்பால
உலகென்றால் தமிழ்கூறும் உலகைச் சொல்வார்
நீரென்றால் காவிரியின் தண்ணீர் என்பார்
நெடுங்கால மொழியென்றால் தமிழே யென்பார்
தாரென்றால் வாழ்வேந்தன் சோழன் என்பார்
தரணிதனில் உலகமெலாம் வணிகம் செய்த
பாரென்றால் காவிரிப் பூம்பட்டி னந்தான்
பார்த்துவா எனக்கடலை விலங்கச் செய்தார்.

—சொ. வடிவேலன்

அலைமகளைத் தழுவியதால் அழுகுமுகம் சிவப்பேறத்
தலைமகனும் இளங்கதிரோன் தமிழ்தவழ்ந்து விளையாடும்
கலைமகளின் இருப்பிடமாம் காவிரியாள் நகர்காண
அலைமுகட்டில், கீழ்க்கடலில் ஆர்ப்பரித்தே எழுகின்றான்!

இருள்வடிந்த திருநகரை இனியஒளி மெருகேற்ற
அருள்படிந்த முகமாதர் கணவனடி தொழுகின்றார்
மருள்மடிந்த தினியென்று மங்கலநாண் முரசதிரப்
பொருள்படிந்த குறளோதிப் புறப்படுகின் றார்இளையோர்!

இளங்குருகு முதுநாரை இறகடித்துப் பறந்தோடக்
குளங்கிணறு கரையோரம் குடமெடுத்தோர் விளையாடக்
களம்பலவும் கண்டுபுலிக் குறிபொறித்தோர் தலைநகரில்
வளம்பெருகும் வயலோரம் மடவன்னம் விளையாடும்!

—புலவர் கோ. அப்துல் லத்தீப்

பொய்யாக் குலப்பொன்னி புகுந்த கடற்றுறையில்,
நெய்தல் நிலப்பரப்பில் நீண்ட பெருநகராய்ப்
பூம்புகார்ப் பட்டினமே, புகழ்ச்சோழ வேந்தர்களால்
ஓம்பத் தலைநகராய் ஓரா யிரமாண்டு
மாண்ட புகழில் வளர்ந்ததடா! அந்நகரின்
காண்டற் கரியநற் காட்சியெலாம் இன்றைக்கும்
நீண்ட வரலாற்று நித்திலப்பூக் காவியங்கள்
பூண்ட மணத்தோடு புதுப்பேழை யாய்க்காட்டும்!
அப்பே ழைகாட்டுகின்ற அப்பொன் னிழைவரிகள்
செப்புத் தகடல்ல! செந்தமிழர் பொன்வாழ்வு!

—புலவர் வேலவன்

காவிரிப்பாள் காவிரித்தாய்! கவிவிரிப்பார் பெரும்புலவர்!
பாவிரிக்கும் புலவர்க்குப் பணம்விரிப்பான் கரிகாலன்!
கோவிரித்த புகழாலே குணம்விரித்த நெறியாலே
காவிரிப்பூம் பட்டினத்தைக் கடலணைத்து விட்டதம்மா!

—முத்து. வேங்கடேசன்

பூவிரி சோலை எல்லாம் பொன்முழுக் காட்டி விட்டுக்
காவிரி யாறு ஆங்கே கடலினைக் கூடிச் சேரும்
பாவிரி புகார்ப் பேரூரில் பகலவன் எழுந்தான் ஆனால்
பாய்விரி மரக்க லங்கள் பகலினை மறைத்தல் கண்டேன்

நீராடச் சென்றேன் அங்கே நெடுமணற் பரப்பில் காதல்
போராடு களமே போன்று புன்னையின் மலர்கள் கண்டேன்.
சீராடும் தாழம் பூக்கள் ; சிற்றிடை வலைச்சி யர்கள்
மாராட ஆட மீன்கள் மலையெனச் சுமத்தல் கண்டேன் !

—பே. சா. தனராசு

கற்புறு தெய்வ மெங்கள்
கண்ணகி வாழ்ந்த மூதூர்
பொற்புறு நடனம் காட்டிப்
புகழுறு தவமேற் கொண்ட
நற்புகழ் மாதவிப் பெண்
நாட்டியங் கண்ட நல்லூர்
பிற்பட மேகலை தான்
பிணிப்பசி துடைத்த பேரூர் !

எழிலுலவு மாளிகையும் இசையுலவு
மன்றுகளும் ஏற்ற மிக்க
தொழிலுலவு வீதிகளும் துறையுலவு
கடலலையில் தோய்ந்த முத்தும்
பொழிலுலவு மதுகரமும் பூவுலவு
சோலைகளும் புகழி னோங்கும்
எழிலுலவு கன்னியரின் விழியுலவும்
அருள்கமழும் புகாரே எம்மூர் !

—ப. முத்துசாமி, பி.ஏ.,பி.டி.



22A
8-57

வடபழனி அச்சகம், சென்னை-26